# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : **15384 / 2007 /** எம்சி. **8** நாள் **17.9.2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - செப்டம்பர் 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.


-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற **24.9.2007** ஆம் தேதி திங்கள் கிழமை காலை **11.00** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/




நகல் :
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## செப்டம்பர் 2007 மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி |
| | இ) கேள்வி நேரம்<br>ஈ) நேரமில்லா நேரம் |
| வ.எண் | உ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1. | Jnnurm -திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் -பயனாளிகள் சேவைக் கட்டணம் நிர்ணயம் செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 2. | பணியமைப்பு-மாநகராட்சி வழக்குரைஞர்கள் நியமனம் செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 3. | பொறியியல் பிரிவு-7 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 4. | பொறியியல் பிரிவு-வடக்கு மண்டலம்-வார்டு எண் 65-கவுண்டம்பாளையம் வெற்றிவேல் நகர் முதலியன-தார்சாலை புதுப்பித்தல் பணி-ரூ19.5 லட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 5. | கல்விப் பிரிவு-மாநகராட்சி கோவில்மேடு நடுநிலைப்பள்ளி – உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது-அரசு ஆணை பதிவு செய்தல்-தொடர்பாக. |
| 6. | குடிநீர் விநியோகம்-இணையதளம் மூலம் வரி செலுத்தும் வசதி-இணையதள நுழைவு வசதி – பேங்க் ஆப் இந்தியா, ஒப்பணக்கார வீதி கிளை- குறைந்த சேவைக் கட்டணம் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 7. | பொதுப்பிரிவு-மேட்டுப்பாளையம் ரோடு –உடல் ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கம்-2006-07 ம் ஆண்டுக்கு ரூ 5000/- நன்கொடை வழங்குதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 8. | பொறியியல் பிரிவு-தேசிய குடிசைப்பகுதி அபிவிருத்தித் திட்டம்-வார்டு எண் 1-குரும்பர் வீதி பகுதி-குட்டை தூர்வாறுதல், தடுப்புச்சுவர் அமைத்தல்-ஒப்புதல் தரப்பட்டது-ரத்து செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 9. | வருவாய் பிரிவு-நகர்புற உள்ளாட்சி அமைப்புகள்-கடைகள் கட்டிடங்கள் முதலியன-தனியாருக்கு குத்தகைக்கு விடுதல் மற்றும் புதுப்பித்தல்-திருத்திய நடைமுறைகள்-ஆணை வெளியிடப்பட்டது-பதிவு செய்தல்-தொடர்பாக. |
| 10. | பணியமைப்பு-திருமதி எம். பானுமதி, பலநோக்கு சுகாதார பணியாளர்-சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோரியது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 11. | பணியமைப்பு-திருமதி ப. மெர்லின், பலநோக்கு சுகாதார பணியாளர்-திருநெல்வேலி மாநகராட்சிக்கு மாறுதல் கோரியது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 12 | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-இராமநாதபுரம் கிராமம்-க.ச.எண் 489/2 பாகம் 489/3 பாகம் -19.68 சென்ட் நிலம்- நில உபயோக மாற்றம்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 13 | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-புலியகுளம் கிராமம்-நகரளவு எண் 1389/2 பாகம் 1392/4 பாகம் -41.80 சென்ட் நிலம்- நில உபயோக மாற்றம்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 14 | நகரமைப்புப் பிரிவு-தெற்கு மண்டலம்-நகரளவு எண் 596/14-A.T.T. காலனி, பாலசுந்தரம் ரோடு-1325.3 சதுர மீட்டர் இடம்-நில உபயோக மாற்றம்-பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 15 | நகரமைப்புப் பிரிவு-தெற்கு மண்டலம்- வார்டு எண் 12-இராமநாதபுரம் கிராமம்-க.ச.எண் 599/2, 599/1C – 4.09 ஏக்கர்- நில உபயோக மாற்றம்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 16 | பொறியியல் பிரிவு-மேற்கு மண்டலம்-வார்டு 64-மேட்டுப்பாளையம் சாலை-பேருந்து நிலையம் கட்டுதல் பணி- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |

| | |
|---|---|
| 17 | பொது சுகாதாரப் பிரிவு-2007-08 ம் நிதியாண்டு –தீபாவளி பண்டிகை-துப்புரவு பணியாளர்கள் முதலியவர்களுக்கு சீருடைகள் முதலியன வழங்குதல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 18 | பொறியியல் பிரிவு-23 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 19 | தெற்கு மண்டலம்-காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம்-நவீன கட்டண கழிப்பிடம்- 2007-08-கட்டணம் வசூலிக்கும் உரிமம் -ரத்து செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 20 | தெற்கு மண்டலம்-காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம்-இருசக்கர வாகன நிறுத்துமிடம் - 2007-08-கட்டணம் வசூலிக்கும் உரிமம் -ரத்து செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 21 | தெற்கு மண்டலம்-காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம்-நவீன கட்டண கழிப்பிடம்- 2007-08-கட்டணம் வசூலிக்கும் உரிமம் -ரத்து செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 22 | தெற்கு மண்டலம்-காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம்-இருசக்கர வாகன நிறுத்துமிடம் - 2007-08-கட்டணம் வசூலிக்கும் உரிமம் -ரத்து செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 23 | பொது சுகாதாரப் பிரிவு-திடக்கழிவு மேலாண்மைப் பணி –லாரிகள் மற்றும் டிராக்டர்களை கொண்டு குப்பைகள் எடுக்கும் பணி-ஒப்பந்த காலம் நீடிப்பு செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 24 | பொறியியல் பிரிவு-தெற்கு மண்டலம்-வார்டு எண் 27-மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் அமைத்தல்-ரூ 25 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 25 | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 26--நகரளவு எண் **10/1086/1** ஏ ல் **- 17,105** சதுரடி நிலம்- நில உபயோக மாற்றம்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 26 | நகரமைப்புப் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 14-சௌரிபாளையம் கிராமம் -க.ச.எண் **522, 523/3 - 1** ஏக்கர் **83.52** சென்ட் நிலம்- நில உபயோக மாற்றம்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 27 | கல்விப் பிரிவு-மாநகராட்சிபள்ளிகளில் **Pre KG** முதல் 12 ம் வகுப்புவரை ஆங்கில வழி பயிற்சி வகுப்புகள் துவக்குதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 28 | பொறியியல் பிரிவு-கிழக்கு மண்டலம்-வார்டு எண் 10-ஜி.வி. குடியிருப்பு பகுதியில் உள் விளையாட்டு அரங்கம் அமைத்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 29 | கிழக்கு மண்டலம்-வார்டு எண் 24-நஞ்சுண்டாபுரம் ரோடு-மாநகராட்சி வணிக வளாக கடை எண் 1,2- குத்தகைதாரர் உரிமம் ரத்து செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 30 | கிழக்கு மண்டலம்-வார்டு எண் 6-சிங்காநல்லூர் கிராமம்-க.ச.எண் **118/4** முதலியன **- 22.48** ஏக்கர்-பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கக் கோரியது -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 31 | நகரமைப்புப் பிரிவு-வடக்கு மண்டலம்-சௌரிபாளையம் கிராமம்-க.ச.எண் 428 /2-வாரிபுறம்போக்கு – ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடம்-குத்தகைக்கு வழங்க மறுத்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 32 | நகரமைப்புப் பிரிவு-வடக்கு மண்டலம்-கணபதி கிராமம்-புல எண் 260 /1 மற்றும் 262 /1- 0.02 ஏக்கர் வண்டிப்பாதை புறம்போக்கு நிலம்-இரயில்வே துறைக்கு நில உரிமம் மாற்றம் செய்தல்-ஆட்சேபனையின்மை சான்று வழங்கக் கோருதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 33 | நகரமைப்புப் பிரிவு-கணபதி கிராமம்-வார்டு எண் 72-க.ச.எண் **393/1, 393/2** பாகம்-60 அடி சாலையை 30 அடி சாலையாக மாற்றுதல்-மாமன்ற முடிவிற்கு |
| 34 | **Jnnurm** –பாதாள சாக்கடைத் திட்டம்- ரூ**377.13** கோடி மதிப்பீடு-அனுமதிக்கப்பட்டது-நிபந்தனைகள் ஏற்றல்- -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 35 | கணிணி பிரிவு-விவரப் பதிவாளர் மற்றும் சூப்பர்வைசர்களின் ஒப்பந்தகாலம் முடிவடைதல்-**M/s.KGISL** நிறுவனம்-கால நீடிப்பு செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 36 | பொறியியல் பிரிவு-கிழக்குமண்டலம்-வார்டு எண் 16-ஹட்கோ காலனி மற்றும் அண்ணாநகர் பகுதி இணைப்பு பாலம்--சாலையுடன் கூடிய தடுப்புசுவர் அமைத்தல் பணி-ரூ24.80 இலட்சம் மதிப்பீடு –நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |

| | |
|---|---|
| 37 | பொறியியல் பிரிவு-கிழக்குமண்டலம்-வார்டு எண் 16- ஹட்கோ காலனி மற்றும் அண்ணாநகர் பகுதி இணைப்பு பாலம்--ரூ24.60 இலட்சம் மதிப்பீடு –நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 38 | கிழக்கு மண்டலம்-க.ச.எண் 324-சிங்காநல்லூர் மயானத்தில் இயற்கை தாவர வாயு மயானம் அமைத்தல்-M/s.சாந்தி சோசியல் சர்வீஸஸ் நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டது-கூடுதல் நிபந்தனை விதித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 39 | வடக்கு மண்டலம்-க.ச.எண் 302/2பி-விளாங்குறிச்சி மயானத்தில் இயற்கை தாவர வாயு மயானம் அமைத்தல்-M/s. P.S.G. & Sons Charities நிறுவனத்திற்கு அனுமதி வழங்குதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 40 | தெற்கு மண்டலம் -மாநகராட்சி வணிக வளாக கடைகள்-N.H.ரோடு முதலியன-ஒப்பந்தப்புள்ளி கோரியது-ஏலக்கோரிக்கை ஏற்றல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 41 | தெற்கு மண்டலம் -மாநகராட்சி வணிக வளாக கடைகள்-வாடகை உயர்வு செயப்பட்டது-குறைத்தல்- மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 42 | தெற்கு மண்டலம் - Dr.நஞ்சப்பா ரோடு -மாநகராட்சி வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு அலுவலகங்கள்-வாடகை உயர்வு செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 43 | தெற்கு மண்டலம்- மாநகராட்சி பிரதான அலுவலகம்-Jnnurm அலுவலக கட்டிடம் கட்டுதல்-ரூ25 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 44 | தெற்கு மண்டலம்- மாநகராட்சி பிரதான அலுவலகம்-Jnnurm அலுவலக கட்டிடம் கட்டுதல் பணி-ரூ25 இலட்சம் மதிப்பீடு-உட்புற வடிவமைப்பு மற்றும் தொலைபேசி-கணிணி வசதிகள் செய்தல்-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 45 | தெற்கு மண்டலம்- மாநகராட்சி பிரதான அலுவலகம்-Jnnurm அலுவலக கட்டிடம் கட்டுதல்-குளிர்சாதன வசதி,மின்வசதி மற்றும் கூட்ட அறை வசதிகள் செய்தல்-ரூ25 இலட்சம் மதிப்பீடு -நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 46 | தெற்கு மண்டலம்- மாநகராட்சி பிரதான அலுவலகம்-Jnnurm அலுவலக கட்டிடம் கட்டுதல்-சுகாதார வசதி மற்றும் குடிநீர் வசதி செய்தல்-ரூ 25 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 47 | நகரமைப்புப் பிரிவு-டவுன் சர்வே 2/1010-ல் உள்ள 0.10 ஏக்கர் நிலம்-மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு நில உரிமை மாற்றம் செய்தல்-ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல்-மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 48 | நகரமைப்புப் பிரிவு-லாலிரோடு-தடாகம் சாலை சந்திப்பு-மகாகவி பாரதியார் திருவுருவச் சிலை நிறுவுதல்-ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 49 | நகரமைப்புப் பிரிவு--டாக்டர் அம்பேத்கர் திருவுருவச் சிலை நிறுவுதல்- ஆட்சேபனையின்மை சான்று வழங்குதல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 50 | கிழக்கு மண்டலம்-சிங்காநல்லூர் பேருந்து நிலையம்-உணவகம் நடத்தும் உரிமம்-ரத்து செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 51 | பணியமைப்பு -3மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்புதல்-தேர்வு செய்யப்பட்டது-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 52 | தெற்கு மண்டலம்-வ.உ.சி.பூங்கா மைதானம்-வாடகை உயர்வு செய்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 53 | வடக்கு மண்டலம்-வார்டு எண் 66-கணபதி வேதம்மாள் நகர்-மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணி-ரூ20 இலட்சம் மதிப்பீடு-நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக. |

இணைப்பு - 1

நன்றியுரை.

## திருக்குறள்

**எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**
**வேறாகும் மாந்தர் பலர்.**

**(குறள் - 514)**

## விளக்கம்

**எவ்வளவுதான் வழிமுறைகளை ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுத்தாலும், செயல்படும் பொழுது வேறுபடுகிறவர்கள் பலர் இருப்பர்.**

**-திருவள்ளுவர்.**

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

| |
|---|
| **இ. கேள்வி நேரம்** |
| **24-09-2007 ம் தேதி மாமன்ற சாதாரணக் கூட்டம்** |
| **மாமன்ற உறுப்பினர்களது கேள்வி நேரம் பட்டியலிட்டு கொடுக்கப்பட்டுள்ளது.** |
| **மாமன்றத்தில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாமன்ற உறுப்பினர்களின் பெயரை அழைத்தவுடன் மன்ற உறுப்பினர் எழுந்து மன்றத்தின் பட்டியலில் உள்ள அவரது கேள்வியினை கேட்கலாம்.** |
| **கேள்விக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் பதிலளிப்பார்கள்.** |

பொருள் எண் 1

கடந்த 23.07.2007 ம் தேதிய மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை ரூ. 96.51 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட உள்ளது. தற்பொழுது மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 20 கோடி செலவாகி வருகிறது. தற்போது செயலாக்க உள்ள புதிய திட்டத்தின் கீழ் கழிவுகளை மக்கும் குப்பை , மக்கா குப்பை என தரம் பிரிக்க ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு கொள்கலன்கள் வழங்குவதுடன் அவ்வாறு மக்கும் குப்பை , மக்கா குப்பை என பிரித்து வீட்டில் வைக்கப்பட்டுள்ள கழிவுகளை மாநகராட்சி பணியாளா்கள் மூலம் வீடு வீடாக சென்று சேகரம் செய்து தெருக்களில் வைக்கப்படும் கொள்கலன்களில் சேமித்து அவைகளை முழுவதும் மூடப்பட்ட வாகனங்கள் மூலம் சுகாதார கேடு இன்றி குப்பை மாற்று நிலையத்தில் கொட்டப்படும். குப்பை மாற்று நிலையத்திலிருந்து பெரிய வாகனங்களில் மக்கும் குப்பைகளை உரம் தயாரிக்க உரக்கிடங்கிற்கும் , மறு சுழற்ச்சிக்கு தகுதியானவைகளை மறுசுழற்ச்சி நிலையங்களுக்கும் மக்காத குப்பை மற்றும் மறுசுழற்ச்சியிலிருந்து எடுக்கப்பட்ட கழிவுகளை விஞ்ஞான முறைப்படி சுகாதார கட்டமைப்பு ( Sanitary landfill ) நிலையத்திற்கும் எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து திடக்கழிவு மேலாண்மையும் மேற்கொள்ள மத்திய மாநில அரசு நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்றாலும் அன்றாடம் ஆகும் பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ. 17.56 கோடி ஆண்டொன்றிற்கு செலவாகும் என எதிா்பாா்க்கப்படுகிறது. தற்பொழுது ஆகும் செலவினத்துடன் நடைமுறைப்படுத்தவுள்ள புதிய திட்டத்திற்கும் சோ்த்து உத்தேசமாக ரூ 37.56 கோடி செலவாகும் என எதிா்பாா்க்கப்படுகிறது. இச்செலவின் ஒரு பகுதியையாவது பொதுமக்கள் பங்களிப்பாக பெறப்பட்டால் மட்டுமே திட்டம் தொடா்ந்து நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகும் எனவே மிகக் குறைந்த விகிதத்தில் பின்வருமாறு திடக்கழிவு பயனாளிகள் சேவை கட்டணம் வசூல் செய்யலாம்.

1) குடியிருப்பு வீடுகள் - வீடு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு : ரூ. 1/-

2) ஒவ்வொரு கடை / நிறுவன வாரியாக குப்பைகள் சேகரிக்கப்படும் கடைகள் மற்றும் நிறுவனங்களுக்கு நாள் ஒன்றுக்கு : ரூ 2/-

3) உணவகங்கள் / கல்யாண மண்டபங்கள்/ வணிக நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து சிறிய வாகனம் (3 டன்கள்) மூலம் அகற்ற ( நடை ஒன்றுக்கு ) : ரூ 500/-

4) உணவகங்கள் / கல்யாண மண்டபங்கள்/ வணிக நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து பெரிய வாகனம் ( 3 டன்னுக்கு மேல்) மூலம் அகற்ற ( நடை ஒன்றுக்கு ) : ரூ 1000/-

இதன் மூலம் கிடைக்கும் ஆண்டிற்கு சுமாா் ரூ. 7 /- கோடியின் மூலம் மேற்கண்ட செலவினத்தை ஈடு செய்யலாம். இப் பொருள் குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு தனது தீா்மான எண் 15 நாள் 21-06-2007 ல் பரிந்துரை வழங்கியதின் பேரில் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு -</u> அனுமதிக்கலாம். ந.க.எண் : 13087/2006/MD3

<u>மாநகர மன்ற தீா்மான எண் 84 நாள் 24.09.07</u>

குப்பைகளை அகற்றுவதற்கு வருடாந்திர சொத்துவரி ரூ.500/-க்கும் குறைவான குடியிருப்பு வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10/- சேவைக் கட்டணமாக நிா்ணயம் செய்யவும், ரூ.501/- முதல் ரூ.1000/-வரையுள்ள குடியிருப்பு வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20/- சேவைக் கட்டணமாக நிா்ணயம் செய்யவும், ரூ.1000/-க்கும் மேல் உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30/- சேவைக் கட்டணமாக நிா்ணயம் செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு கடை—நிறுவன வாரியாக குப்பைகள் அகற்றப்படுவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ2/- எனவும், உணவகங்கள் – கல்யாண மண்டபங்கள் – வணிக நிறுவனங்கள் – மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து சிறிய வாகனம் மூலம் 3 டன்கள் வரை அகற்ற நடை ஒன்றுக்கு ரூ.500/- எனவும், பெரிய வாகனம் மூலம் 3 டன்னுக்கு மேல் அகற்ற நடை ஒன்றுக்கு ரூ.1000/- எனவும் நிா்ணயம் செய்யவும் தீா்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆதரவினைத் தெரிவித்து ஏற்றுக் கொண்டனர்.

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 5 | திருமதி யு. வேல்மணி |
| 2 | 6 | திரு. எஸ்.எம்.சாமி |
| 3 | 10 | திரு. ப. தனராஜ் |
| 4 | 13 | திருமதி. நா. ஜானகி |
| 5 | 14 | திரு இரா. சேரலாதன் |
| 6 | 16 | திரு நா. கார்த்திக் |
| 7 | 21 | திருமதி வி. கலையரசி |
| 8 | 24 | திரு வெ.ந. உதயகுமார் |
| 9 | 25 | திரு. ப. பைந்தமிழ் |
| 10 | 26 | திருமதி. ஆர். அமுதா |
| 11 | 27 | திருமதி. எஸ். யமுனாதேவி |
| 12 | 30 | திரு அ. நந்தகுமார் |
| 13 | 31 | திரு .ஆர்.எம். சேதுராமன் |
| 14 | 32 | திரு .ஆர். சிவமுருகேசன் |
| 15 | 34 | திரு .கோ. மோகன்குமார் |
| 16 | 36 | திரு. பி. கிருஷ்ணமூர்த்தி |
| 17 | 39 | திரு. டி.எ. அப்துல்நாசர் |
| 18 | 40 | திரு. வி. ஐ. பதுருதீன் |
| 19 | 41 | திரு. ஜி.டி. இராஜேந்திரன் |
| 20 | 42 | திரு. பி. நாச்சிமுத்து |
| 21 | 43 | திருமதி. என். தமிழ்செல்வி |
| 22 | 44 | திரு. ப. இராஜேந்திரபிரபு |
| 23 | 48 | திரு கா. செல்வராஜ் |
| 24 | 49 | திரு. வி.பி. செல்வராஜ் |
| 25 | 54 | திருமதி. எம். மெஹர்நிஸா |
| 26 | 65 | திருமதி. அசுந்தாமேரி ஜெயசீலன் |
| 27 | 67 | திருமதி. மீனா லோகநாதன் |
| 28 | 70 | திரு. பி.வி. சுப்பிரமணியம் |
| 29 | 72 | திருமதி. பெ. சாந்தகுமாரி |
| 30 | 4 | திருமதி. ப. சோபனா |
| 31 | 8 | திரு. ஆர். ராமசாமி |
| 32 | 11 | திரு. மு. கிருஷ்ணமூர்த்தி |
| 33 | 23 | திரு. ஆர்.எஸ். திருமுகம் |
| 34 | 28 | திரு. கே. ஸ்ரீனிவாசன் |
| 35 | 33 | திரு. வி.கே.எஸ்.கே. செந்தில்குமார் |
| 36 | 62 | திருமதி. பி. லலிதா |
| 37 | 63 | திரு. ஆர். வெங்கடாசலம் |
| 38 | 12 | திரு. என்.கே. அசோக்குமார் |
| 39 | 19 | திரு. பெ. பாலசுப்ரமணியம் |
| 40 | 37 | திரு. கா. சம்பத்குமார் |
| 41 | 38 | திருமதி .ஆ. அமுதாராணி |
| 42 | 53 | செல்வி .ந. கமலவேணி |
| 43 | 60 | திருமதி. ஏ. சாந்தாமணி |
| | | |

கீழ்க்கண்ட மாமன்ற உறுப்பினர்கள் தங்களது ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர்.

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|---|
| 1 | 3 | திரு. சி. பத்மநாபன் |
| 2 | 7 | திருமதி. மு. கனகமணி |
| 3 | 15 | திரு. ராமமூர்த்தி |
| 4 | 17 | திருமதி. சி. சிவகாமி |
| 5 | 29 | திருமதி. ஆர். விஜயலட்சுமி |
| 6 | 35 | திரு. என். முருகேசன் |
| 7 | 57 | திரு .எம்.எஸ். வேல்முருகன் |
| 8 | 68 | திரு. என். முருகேசன் |
| 9 | 9 | திருமதி. சா. ராஜாமணி |

| | | |
|---|---|---|
| 10 | 20 | திருமதி. கே. ஹேமலதா |
| 11 | 59 | திரு. ஆர். கல்யாணசுந்தரம் |
| 12 | 61 | திரு. கே. புருசோத்தமன் |
| 13 | 18 | திருமதி. யு. சாவித்திரி |
| 14 | 51 | திரு. ந. சிவக்குமார் |
| 15 | 66 | திரு .ஆர். கண்ணதாசன் |
| 16 | 22 | திருமதி. டி. ஆர். கோமதி |
| 17 | 1 | திரு. கு. சந்திரசேகரன் |
| 18 | 2 | திருமதி. து. ஜோதிமணி |
| 19 | 45 | திரு. கே. ஏ. ஆதிநாராயணன் |
| 20 | 52 | திரு. எம். நடராஜ் |
| 21 | 55 | திருமதி. ஆ. சுப்புலட்சுமி |
| 22 | 56 | திரு .ந. சின்னதுரை |
| 23 | 58 | திருமதி. ஜி. ஜெயந்தி |
| 24 | 64 | திருமதி. ஹெச் .மெஹர்பான் |
| 25 | 69 | திரு. ஆர். பிரபாகரன் |
| 26 | 71 | திரு. ப. ராஜ்குமார் |
| 27 | 47 | திரு. வெ.கி.ராஜேந்திரன் |
| 28 | 50 | திருமதி. என். ரேவதி |

இக்கட்டணங்களை 1.1.2008 முதல் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

பொருள் - பணியமைப்பு- கோவை மாநகராட்சி – வழக்குகள்-வழக்குரைஞர்கள் நியமனம் செய்தல்-தொடர்பாக.

அரசாணை (நிலை) எண். 160 நாள் 27.8.1998-ன்படி, கோவை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 4 குடிமை வழக்குரைஞர்கள் பணியிடம் மற்றும் ஒரு குற்றவியல் வழக்குரைஞர் பணியிடத்தையும் சேர்த்து மொத்தம் 5 வழக்குரைஞர்கள் பணியிடங்களுக்கு, கோவை மாநகர மன்றத் தீர்மானம் எண் 16, நாள் 12.3.2003 ன்படி, கீழ்க்காணும் 5 வழக்குரைஞர்களையும் மாநகராட்சி வழக்குரைஞர்களாக ஒரு ஆண்டு காலம் பணிபுரிய ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 24668/ 2001/ எம்.சி.1 நாள் 12.3.2003 அன்று உத்திரவிடப்பட்டது.

1. திரு எஸ். சந்திரன் பி.ஏ., பி.எல்.,
2. திரு எம். ஷாஜஹான், பி.எஸ்.சி., பி.எல்.,
3. திரு எஸ்.எஸ். விஜயக்குமார், பி.ஏ.,பி.எல்.,
4. திரு எம். நடராஜன். எம்.ஏ., பி.எல்.,
5. திரு வி. விக்டர். பி.எஸ்.சி., பி.எல்.,

மேற்காணும் ஐந்து வழக்குரைஞர்களின் பதவிக் காலம் ஏற்கனவே முடிவு பெற்றுள்ளபடியால் மேற்படி 5 வழக்குரைஞர் பணியிடங்களுக்கு புதிய வழக்குரைஞர்கள் நியமனம் செய்யும் பொருட்டு, கோயமுத்தூர் வழக்குரைஞர்கள் கழகத்திற்கு பெயர் பட்டியல் கோரப்பட்டுள்ளது. ஆகவே, 5 வழக்குரைஞர்கள் பணியிடத்திற்கு புதிய வழக்குரைஞர்களை நியமனம் செய்ய அனுமதி வேண்டி மன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண் 12115 /2007 / (எம்.சி 1) / (எம்.சி 10)

<u>மாநகர மன்ற தீர்மான எண் 85 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 3

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 5-07-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2368 / 07 எம்.டி.2 | கோவை மாநகராட்சி வார்டு எண் 72-க்குட்பட்ட பாலமுருகன் நகரில் புதிய தார்தளம் அமைத்தல் பணி. | 25.00 | 12.6.07 முதல் அழைப்பு | திருவாளர்கள் . குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02 குறைவு |
| 2 | 4120 / 07 எம்.டி.4 | கோவை மாநகராட்சி வார்டு எண் 56- ல் உள்ள சொக்கம்புதூா மயான மைதானத்திற்கு அருகில் குளத்தேரி சாலைக்கு தார்தளம் புதுப்பித்து அமைத்தல். | 18.00 | 7.6.07 முதல் அழைப்பு | திரு. ஆர். கிருஷ்ணசாமி | 0.23 குறைவு |
| 3 | 3235 / 07 எம்.டி.4 | கோவை மாநகராட்சி வார்டு எண் 38 இஸ்மாயில் வீதியில் மறுதார்தளம் அமைத்தல். | 19.00 | 12.6.07 முதல் அழைப்பு | திரு. ஆர். கிருஷ்ணசாமி | 0.01 குறைவு |
| 4 | 133320/ 06 எம்.டி.4 | கோவை மாநகராட்சி வார்டு எண் 54-ல் உள்ள ஜே.கே.கார்டன் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுற்றுச் சுவர் அமைத்து சிறுவர் விளையாட்டுத் திடல் , பூங்கா மற்றும் நடைபாதை அமைத்தல் பணி | 16.00 | 12.6.07 முதல் அழைப்பு | திருவாளர்கள். என்..பி.கே. அசோசியேட்ஸ் | 0.11 குறைவு |
| 5 | 16106 / 05 எம்.டி.4 | கோவை மாநகராட்சி வார்டு எண் 28 டாக்டர் நஞ்சப்பா சாலையின் மேற்கு புறம் மத்திய பேருந்து நிலையம் முதல் கிராஸ் கட் சாலை வரை நடை பாதையை செப்பனிடுதல். | 9.50 | 12.6.07 மூன்றாம் அழைப்பு | திரு. சி. எஸ் ரவிச்சந்திரன் | 4.75 அதிகம் |
| 6. | 3716 07 / (எம்.டி.3) எம்.டி.1 | கோவை மாநகராட்சி வார்டு எண் 52 பொன்னைய்ய ராஜபுரம் திட்ட சாலையில் சட்ட மன்ற உறுப்பினர் நிதியியின் கீழ் புதிய தார்தளம் அமைத்தல். | 12.25 | 12.5.07 முதல் அழைப்பு | திருவாளர்கள் பி. செந்தில் அன் கோ | 4.37 அதிகம் |
| 7 | 12903 / 05 எம்.டி.2 | கோவை மாநகராட்சி வார்டு எண் 66 சங்கனூா் மயானத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல். | 22.10 | 12.6.07 நான்காம் அழைப்பு | திரு. ஆர். செல்வராஜ் | 3.76 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -வரிசை எண் 1 முதல் 4 வரை உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 5முதல் 7 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம். ந.க.எண். 2368/07/எம்.டி2.

மாநகர மன்ற தீர்மான எண் 86 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்

**பொருள் எண் : 4**

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பிரிவு எண் 5 – வார்டு எண் 65 கவுண்டம்பாளையம் வெற்றிவேல் நகர், பாங்கோ வீதி, ஜெய் நகர் பகுதிகளில் தார்சாலையை புதுப்பித்து தருமாறு மாமன்ற உறுப்பினர் கேட்டுள்ளார். இதனை நிர்வாகப்பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 19,50,000/- க்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இம்மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 4355/07/o1(t) எம்.டி2.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 87 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

**பொருள் எண் : 5**

பொருள் கல்வி நிர்வாகம் கோவை மாநகராட்சி கோவில்மேடு நடுநிலைப்பள்ளி உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது – அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்–

அரசாணை எண். 130 பள்ளிக்கல்விக் (இ1) துறை நாள் 14-06-2007ல் மாநகராட்சி கோவில் மேடு நடுநிலைப்பள்ளியை உயர்நிலை பள்ளியாக 2007-2008 கல்வியாண்டில் தரம் உயர்த்தி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u> - பதிவு செய்யலாம். ந.க. எண்.11579/2004/கே2-

<u>மாநகர மன்ற தீர்மான எண் 88 நாள் 24.09.07</u>

அரசாணை பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

**பொருள் எண் 6**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வரி செலுத்துவோருக்கு கூடுதல் வசதி அளிக்கும் பொருட்டு இணையதளம் மூலம் வரி செலுத்த ஏதுவாக இணைய தள நுழைவு வசதி (Internet Gate Way for E-Remittance) பெற அனுமதி அளிப்பது தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வரி செலுத்துவோரின் வசதியை முன்னிட்டு இணையதளம் மூலம் வரி செலுத்த ஏதுவாக இணையதள நுழைவு வசதி (Internet Gate Way for E-Remittance) பல்வேறு வங்கிகளில் கோரப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி ஒவ்வொரு வசூல் தொகைக்கும் 1.85 % சேவைக் கட்டணம் என்றும் பாங்க் ஆப் இந்தியா ஒப்பணக்கார வீதி கிளை, ஒவ்வொரு வசூல் தொகைக்கும் ரூ 5/- சேவைக் கட்டணம் என்றும் கொடுத்துள்ளனர். மற்ற வங்கிகளில் இந்த வசதி இல்லை என்ற விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட வங்கிகளில் ஒவ்வொரு வசூல் தொகைக்கும் ரூ 5/- என்று குறைந்த சேவைக் கட்டணம் தெரிவித்துள்ள பேங்க் ஆப் இந்தியா, ஒப்பணக்கார வீதி கிளையில் இணையதள நுழைவு வசதி பெறவும் வருங்காலத்தில் குறைந்த சேவைக் கட்டணம் பெற முன்வரும் வங்கியிலும் இச்சேவையை பெறவும், மன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண் 8301/06/ குவி 6

<u>மாநகர மன்ற தீர்மான எண் 89  நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஐ.சி.ஐ.சி. வங்கியிலும் இச்சேவையை பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கத்தின் நிர்வாகி, மேற்படி சங்கத்திற்கு 2006-2007 ம் ஆண்டிற்கான நன்கொடைரூ 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்குமாறு கேட்டுள்ளார்.

அரசு ஆணை எண் 1066 நாள் 10.12.90-ல் மேற்படி சங்கத்தின் நன்கொடை கோரும் கடிதத்தின் பேரில் உரிய மன்ற அனுமதி பெற்று நன்கொடை வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே உடல் ஊனமுற்ற குழந்தைகள் நல சங்கத்திற்கு 2006-2007 ம் ஆண்டிற்கு ரூ 5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> -அனுமதிக்கலாம். ந.க.எண் **11976/2004/MC9**

<u>மாநகர மன்ற தீர்மான எண் 90  நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

கோவை மாநகராட்சியில் தேசிய குடிசைப்பகுதி அபிவிருத்தி திட்டம் 2004-05-ன் கீழ் மாமன்ற தீர்மான எண் 109 தேதி 29-08-2005-ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1) | வார்டு எண் 1 குரும்பர் வீதி பகுதியில் உள்ள குட்டையில் தூர் வார்தல் | 6.00 |
| 2) | வார்டு எண் 1 குரும்பர் வீதி பகுதி குட்டை சுற்றிலும் தடுப்புசுவர் அமைத்தல் | 10.00 |
| | மொத்தம் | 16.00 இலட்சம் |

மேற்படி பணிகள் மேற்கொள்ள தகுந்த இடவசதி இல்லாத சூழ்நிலை உள்ள காரணத்தால் மேற்குறிப்பிட்ட இரண்டு பணிகளையும் ரத்து செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u> -அனுமதிக்கலாம். ந.க.எண் **4821/2005/**தொ.நு.உ.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 91  நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

------------------------------------------------------------------------------------------------------------------------------------------



**பொருள் எண் 9**

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி-குத்தகை நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் அசையா சொத்துக்களாகிய கடைகள் கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் தனியாருக்கு குத்தகைக்கு விடுதல் புதுப்பித்தல் திருத்திய நடைமுறைகள் ஆணை வெளியிடப்பட்டது-சம்பந்தமாக.

பார்வை - அரசாணை (நிலை) எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் அசையா சொத்துக்களாகிய கடைகள், கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவைகளை தனியார்களுக்கு குத்தகை அடிப்படையில் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது மற்றும் குத்தகையை காலநீடிப்பு மூலம் புதுப்பிப்பது தற்போதுள்ள அனுமதியற்ற அனுபோகதாரர்களுக்கும் மற்றும் குத்தகை உரிமைதாரர்களின் வாரிசுதாரர்களுக்கும் உரிமம் பெயர் மாற்றம் செய்வது தொடர்பான திருத்திய நெறிமுறைகள் பார்வையில் கண்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காண் பொருள் குறித்து இனி வருங்காலங்களில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை தவறாது பின்பற்றுவதற்கும் மாநகராட்சி விதிமுறைகளில் பதிவு செய்ய அனுமதிக்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு மற்றும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்து அங்கீகரிக்கலாம் ந.க.எண் 14471/2007/எம்.எ 1

மாநகர மன்ற தீர்மான எண் 92 நாள் 24.09.07

அரசாணையைப் பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 10**

பொருள் - பணியமைப்பு -கோவை மாநகராட்சி-திருமதி எம். பானுமதி, பல நோக்கு சுகாதார பணியாளர், பட்டுநூல் நகர் நல மையம்- சென்னை மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது –தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி, பட்டுநூல் நகர் நல மையத்தின் பல நோக்கு சுகாதார பணியாளராக பணிபுரியும் திருமதி எம். பானுமதி அவர்களுக்கு சொந்த ஊர் சென்னை என்பதாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் தாய் வீட்டில் விட்டு வைத்திருப்பதாகவும், ஆனால் தன் தாய் பிப்ரவரி மாதம் இறந்துவிட்டார், அந்த அதிர்ச்சியில் தன் தந்தைக்கு பக்கவாதம் பாதித்து விட்டதாலும் தன்னுடைய குழந்தைகளை பார்த்துக்கொள்ள யாரும் இல்லாத காரணத்தினாலும், மேலும் இவருடைய அக்காவும் இறந்து விட்டதால் அவருடைய மூன்று குழந்தைகளையும் இவரே கவனிக்க வேண்டியதாக இருப்பதாலும் தனக்கு சென்னை மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி எம். பானுமதி, பல நோக்கு சுகாதார பணியாளரை சென்னை மாநகராட்சியில் பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண் 4025/07/எம்.சி 3

மாநகர மன்ற தீர்மான எண் 93 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்

பொருள் எண் 11

பொருள்- பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி பா. மெர்லின், பலநோக்கு சுகாதார பணியாளர், பட்டுநூல் நகர் நல மையம் - திருநெல்வேலி மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி, பட்டுநூல் நகர் நல மையத்தில் பல நோக்கு சுகாதார பணியாளராக பணிபுரியும் திருமதி பா. மெர்லின் அவர்களுக்கு சொந்த ஊர் திருநெல்வேலி என்பதாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு திருநெல்வேலி மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி பா. மெர்லின், பல நோக்கு சுகாதார பணியாளரை திருநெல்வேலி மாநகராட்சியில் பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண் **12825/07/எம்.சி 3**

<u>மாநகர மன்ற தீர்மான எண் 94 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 12

திரு. ஹாஜா மொய்தீன், பவர் ஆப் அட்டார்னி, கோயம்புத்தூர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி இராமநாதபுரம் கிராமம் க.ச.எண். 489/2பாகம், 489/3 பாகத்தில் உள்ள 0.19 சென்ட் 296 சதுரடி நிலத்தினை தொழிற்சாலை நில பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு நில பயன்பாட்டிற்கு மாற்றம் செய்து வழங்குமாறு 20.4.2007 -ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்.

மேற்படி மனையிடம் மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 14 -லும் மீனா எஸ்டேட் பகுதியில் சௌரிபாளையம் ரோடு மாநகராட்சி பராமரிப்பில் உள்ள தார் சாலையை அணுகு சாலையாகக் கொண்டு அமைந்துள்ளது. சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 21 -ல் இடம் தொழிற்சாலைப் பகுதியில் அமைந்துள்ளது. இடத்தில் தொழிற்சாலை ஏதுமில்லை. தற்போது இப்பகுதியினை சுற்றி பல குடியிருப்பு பகுதிகள் அபிவிருத்தி அடைந்து வருகிறது.

எனவே, இராமநாதபுரம் கிராமம் க.ச.எண். 489/2 பாகம் மற்றும் 489/3 பாகத்தில் உள்ள 19.68 சென்ட் நிலத்தினை தொழிற்சாலை நில உபயோகத்தில் இருந்து குடியிருப்பு நில உபயோக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 28 நாள் . 16.7.2007 -ல் '' நில உபயோக மாற்றம் செய்ய பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது'' என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> -அனுமதிக்கலாம். ந.க.எண் 6496/07/கி.எச்.1.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 95 நாள் 24.09.07</u>

நகரமைப்பு மற்றும்அபிவிருத்திக்குழுவின் 16.07.2007 ம் தேதிய தீர்மானம் எண்.28 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---



பொருள் எண் : 13

திரு. ஹாஜா மொய்தீன், பவர் ஆப் அட்டார்னி, கோயம்புத்தூர் - 5 என்பவர் கோயம்புத்தூர் மாநகராட்சி, புலியகுளம் கிராமம், அவினாசி சாலையில் நகரளவு எண். 1389/2 பாகம், 1392/4 பாகம் -ல் உள்ள 41.80 செண்ட் நிலத்தினை தொழிற்சாலை நில உபயோகத்தில் உள்ளதை குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய கோரியுள்ளார்.

மேற்படி மனையிடம் மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 26 -ல் பழனிசாமி சாலையில் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 8 -லும், முழுமைத் திட்டத்தின்படியும் இடம் வணிக நில உபயோகப் பகுதியிலும் அமைந்துள்ளது. மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள 30 அடி அகல தார் சாலையை அணுகு சாலையாகக் கொண்டு மனையிடம் அமைந்துள்ளது. அவனாசி ரோட்டில் இருந்து 200 மீட்டர் தூரத்தில் உள்ளது. இம்மனையிடத்தினை சுற்றிலும் குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ளன.

எனவே, நகரளவு எண். 1389/2 பாகம் மற்றும் 1392/4 பாகம் -ல் உள்ள 41.80 சென்ட் இடத்தினை வணிக உபயோகத்தில் இருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 29 நாள் . 16.7.2007 -ல் " நில உபயோக மாற்றம் செய்ய பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது " என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண் 7747/07/கி.எச். 1.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 96 நாள் 24.09.07</u>

நகரமைப்பு மற்றும்அபிவிருத்திக்குழுவின் 16.07.2007 ம் தேதிய தீர்மானம் எண்.29 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 14

திரு. C.உமாபதி, கோயம்புத்தூர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி, A.T.T காலனி, பாலசுந்தரம் ரோடு, நகரளவு எண். 596/14 -ல் உள்ள 1325.3 சதுரமீட்டர் (14265.9 சதுரடி) இடத்தினை குடியிருப்பு நில உபயோக பயன்பாட்டிலிருந்து வணிக நில உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யவும், மேற்படி இடத்தினை பலமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் கோரி விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மனுதாரர் மனையிடம் A.T.T காலனி, பாலசுந்தரம் சாலையினை ஒட்டி (RTO அலுவலக சாலை), மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 27 -ல் அமைந்துள்ளது. மனையிடம் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ளது. தற்போது இம்மனையிடத்தினை சுற்றி உள்ள பகுதியில் வணிக கட்டிடங்களே அபிவிருத்தி அடைந்து வருகின்றது. மனுதாரரால் இவ்விடத்தில் 28 மீட்டர் உயரத்தில் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. வட்டாச்சியர் சான்று இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி வணிக உபயோகத்திற்கு உகந்ததாக உள்ளது.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி, பாலசுந்தரம் சாலை, நகரளவு எண். 596/4 -ல் உள்ள 1325.3 சதுரமீட்டர் இடத்தினை குடியிருப்பு நில உபயோக பயன்பாட்டிலிருந்து வணிக நில உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யவும், இம்மனையிடத்தினை பலமாடி மற்றும் பொதுக்கட்டிட விதிகள் 1973 விதி 4-ன் படி பலமாடி கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் கோரும் மனுதாரரின் விண்ணப்பத்தினை நகர் ஊரமைப்புத் துறைக்கு அனுப்புவது குறித்து நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 30 நாள். 16.7.2007 –ல் ‘‘நில உபயோக மாற்றம் செய்யவும் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யவும் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது'' என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகரமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> -ஒப்புதல் செய்யலாம். ந.க.எண் 6252/2007/எச்.1(தெ).



<u>மாநகர மன்ற தீர்மான எண் 97 நாள் 24.09.07</u>

**நகரமைப்பு மற்றும்அபிவிருத்திக்குழுவின் 16.07.2007 ம் தேதிய தீர்மானம் எண்.30 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் : 15

**கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 12 இராமநாதபுரம் கிராமம் க.ச.எண். 599/2, 599/1C ஆகிய காலைகளில் உள்ள 4.09 ஏக்கர் விவசாய பூமி தனக்கு பாத்தியபட்டது எனவும் அதில் க.ச. எண். 599 -ல் ஓர் பகுதி குடியிருப்பாக உள்ளது எனவும், மீதமுள்ள 3.58 ஏக்கர் நிலப்பரப்பு முழுமைத்திட்டத்தின்படி விவசாய நில உபயோகமாக உள்ளது எனவும், மேற்கண்ட விவசாயத்திற்கு உபயோகமின்றி இருக்கும் பூமியை விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிப்பு நில உபயோகமாக மாற்றம் செய்து தருமாறு மனுதாரர் திரு. விஜயகுமார் தனது 16.2.2007 -ஆம் நாளைய மனுவில் கேட்டுக்கொண்டுள்ளார். நகரமைப்புக்குழு, மாமன்றம், நகர்ஊரமைப்பு இயக்குநர் மற்றும் அரசால் ஒப்புதல் வழங்கிய பின்னரே நில உபயோக மாற்றம் செய்ய இயலும். மேற்படி இடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் 4 -ல் நஞ்சுண்டாபுரம் கிராமத்தின் மேல் புறம் நொய்யல் ஆற்றின் கரையில் உள்ளது. அமைகிறது. தற்போது இவ்விடத்தில் விவசாயம் ஏதும் நடைபெறவில்லை ஆனால் முழுமைத்திட்டத்தின்படி இடம் விவசாயப் பகுதியில் உள்ளது.**

**O.S. எண். 434/1993 நாள். 29.9.06 தேதிய இறுதி அறிக்கையின்படி மனுதாரருக்கு பாத்தியப்படுகிறது. தெற்கு வட்டாச்சியரிடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு நஞ்சுண்டாபுரம் பிரதான சாலை அணுகு சாலையாக அமைந்துள்ளது. இடத்தின் தென்புறம் நொய்யல் ஆறும் மேற்கு பகுதியில் தென்னை தோட்டமும் அமைந்துள்ளது.**

**மேற்படி க.ச. எண். 599/1C 2 -ல் ராமநாதபுரம் கிராமம் பகுதியில் அமைந்துள்ள 3.58 ஏக்கர் விவசாய பூமியினை குடியிருப்பு உபயோக நிலமாக மாற்றம் செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தமது தீர்மான எண். 26 நாள் . 16.7.2007 -ல் " இடம் குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி இடம் வெள்ளப் பெருக்கு காலங்களில் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளதால் மாமன்றத்தில் வைத்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்ப டுகிறது. வட்டாச்சியர், தெற்கு அவர்களின் சான்று எண். ப.மு: 1168/2007/ஆ10; நாள். 21.2.2007 -இல் பிரஸ்தாப இடம் வெள்ளப்பெருக்கால் பாதிப்படைய வாய்ப்பில்லை என்றும், அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் உள்ளடங்கவில்லை எனவும்; உயர்மின் அழுத்தக் கம்பிகள் ஏதும் செல்வதில்லை எனவும்; இராமநாதபுரம் கிராம பட்டா எண். 231 -இன்படி மனுதாரருக்குப் பாத்தியப்பட்டது எனவும்; நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1894 பிரிவு 4(1) -இன் கீழ நில ஆர்ஜித நடவடிக்கைகள் ஏதும் இந்நிலத்திற்கு இல்லை எனவும் வட்டாச்சியரால் சான்றளிக்கப்பட்டுள்ளது. நொய்யல் ஆற்றுக் கரையிலிருந்து 15 மீட்டர் தூரத்திற்குள் எவ்வித கட்டுமானங்களும் கட்டக்கூடாது என்றும்; எவ்வித கழிவு நீரும் நொய்யல் ஆற்றில் கலக்கக்கூடாது என்றும் நிபந்தனை விதிக்கலாம்.**

<u>அலுவலகக் குறிப்பு</u> - நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி கோரும் மனுதாரின் மனுவின் மீது மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண் 2121 /07/H1(தெ).

<u>மாநகர மன்ற தீர்மான எண் 98 நாள் 24.09.07</u>

**பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

**கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 64-க்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் சங்கனூர் கிராமம் க.ச.எண் 158/ஏ, 159/ஏ-ல் உள்ள**

மாநகராட்சிக்குச் சொந்தமான நிலப்பரப்பில் பேருந்து நிலையம் கட்ட கடந்த 2004 ஆம் ஆண்டு மதிப்பீடு ரூ 558.53 இலட்சங்களில் தயாரித்து, அரசாணை (நிலை) எண் 24 நகராட்சி



நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 18.02.2005-ன்படி மொத்த மதிப்பீட்டுத் தொகையில் ரூ 132.50 இலட்சங்களை மாநகராட்சி நிதியிலிருந்தும் மீதித் தொகை ரூ426.03 இலட்சங்களை தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியிலிருந்தும் கடனாக பெற்று திட்டத்தினை மேற்கொள்ள அரசு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இம் மதிப்பீட்டுக்கு மேற்பார்வைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்கள் தனது செயல்முறை ந.க.எண் 45129 /2005 /டி.ஓ.2 நாள் 8.09.2005 அன்று தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்.

மேற்காண் உத்தேசிக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் மாநகராட்சி வருவாயினை அதிகரிக்கும் நோக்கிலும் பொதுமக்களின் வசதியினை கருத்தில் கொண்டும் வணிக வளாகம் அமைப்பதற்காக மேலும் ஒரு தளம் உத்தேசிக்கப்பட்டு, அதற்கான திருத்திய மதிப்பீடு ரூ 700.00 இலட்சங்களில் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் நகர்புற அமைச்சரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் நகர்புற மேம்பாட்டுத் துறை கடித எண் K-14012/86(2)/2006-NURM II நாள் 8.03.2007 -ல் இத்திட்டத்தினை பொதுமக்களின் பங்கேற்புடன் (Public Private Partnership) நிறைவேற்ற வாய்ப்பு குறித்து பரிசீலிக்கலாம் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வாய்ப்புக்களை அறிய விரும்பும் கேட்பு அறிக்கை (Expression of Interest) கோரப்பட்டதில் ஒருவரும் பங்கேற்கவில்லை. இதன் அடிப்படையில் ஒப்புதல் அளித்த வரைபடத்தின்படி வருமானம் தரத்தக்க இனங்களை கட்டுமானப் பணி துவங்குவதற்குமுன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் முன்ஏலமுறை வழிகாட்டுதல்படியும் செயல்படுத்தலாம். ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதையும் அனுமதிக்கலாம். கடைகள் வேண்டி விருப்பமானவர்களை அறிந்து கொள்ள (Demand Assessment) முன்ஏலம் கோரலாம் (Pre Auction). அவ்வாறு இல்லையெனில் மத்திய நகர்புற மேம்பாட்டுத் துறைக்கு தெரிவித்து மான்யம் பெற்று மாநகராட்சி செயல்படுத்தலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண் 7526/2002/ எம்.டி. 3

<u>மாநகர மன்ற தீர்மான எண் 99 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 17

பொருள் :- கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரப் பிரிவு - 2007 2008ம் ஆண்டு தீபாவளிக்கு, துப்புரவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள் மற்றும் தையல் கூலி வழங்குவது தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, துப்புரவு பணியாளர்களுக்கு அரசு ஆணை எண்.37.நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள் 14.05.1999 மற்றும் அரசு ஆணை எண் 393. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 16.09.1997-இல் கண்டுள்ளவாறு ஆண்டிற்கு ஒருமுறை இரண்டு ஜோடி பாலியஸ்டர் சீருடைகள் மற்றும் காலணிகள் வாங்கி வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2007-ம் ஆண்டு தீபாவளிக்கு துப்புரவு பணியாளர்கள் நலப்பிரிவு அலுவலக உதவியாளர்கள் மற்றும் துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு சீருடைகள், காலணிகள் மற்றும் தையல் கூலி ஆகியவை வழங்க தோராயமாக ரூ.25 லட்சம் ஆகும் என பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2006ம் ஆண்டிற்கான செலவினம் | ரூ.18,00,010/- |
| கூடுதலாக 10 % | ரூ. 1,80,001/- |
| | ரூ. 19,80,011/- |

எனவே, மேற்கண்ட செலவினத்தில் சுகாதாரப் பிரிவு, துப்புரவு பணியாளர்களுக்கு சீருடைகள் (தையல் கூலி உட்பட) மற்றும் காலணிகள் வழங்க ரூ.25 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் . 2007-08 ல் வரவு செலவு திட்டத்தில், கணக்கு தலைப்பு எண் 2014 ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**ந.க.எண் 13546/2007/எம்.இ.4**

**மாநகர மன்ற தீர்மான எண் 100 நாள் 24.09.07**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஓம். ஆர். வெங்கடாசலம்)**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 18

**கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 24-08-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.**

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4362/07/ எம்.டி.2 | வார்டு எண் 65-க்குட்பட்ட சங்கனூர் தயிரிட்டேரி சாலையிலிருந்து மணீஸ் நகர் வரை உள்ள தார்சாலையை புதுப்பித்தல் | 22.00 | 17.7.07 முதல் அழைப்பு | திரு. ஆர். கிருஷ்ணசாமி | 2.69 குறைவு |
| 2 | 4484/06/ எம்.டி.2 | வார்டு எண் 72-க்குட்பட்ட கணேஷ் கார்டன் பகுதியில் புதிய தார்தளம் அமைத்தல் பணி | 5.00 | 10.7.07 மூன்றாம் அழைப்பு | தி/ள் . சாந்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 2.45 அதிகம் |
| 3 | 5744/06/ எம்.டி.2 | வார்டு எண் 30-க்குட்பட்ட காந்திபுரம் வீதி எண் 1 ல் மழைநீர் வடிகால் மற்றும் மூடுபலகை திரும்ப அமைத்தல் | 5.00 | 10.7.07 ஐந்தாம் அழைப்பு | திரு. ஆர். செல்வராஜ் | 4.62 அதிகம் |
| 4 | 5745/06/ எம்.டி.2 | வார்டு எண் 30-க்குட்பட்ட காந்திபுரம் வீதி எண் 3 தொடர்ச்சியில் மழைநீர் வடிகால் மற்றும் மூடுபலகை திரும்ப அமைத்தல் | 5.00 | 10.7.07 ஐந்தாம் அழைப்பு | திரு. எம் . தண்டபாணி | 4.51 அதிகம் |
| 5 | 5743/06/ எம்.டி.2 | வார்டு எண் 30-க்குட்பட்ட காந்திபுரம் வீதி எண் 2 மற்றும் 4 ல் மழைநீர் வடிகால் மற்றும் மூடுபலகை திரும்ப அமைத்தல் | 5.00 | 10.7.07 ஐந்தாம் அழைப்பு | திரு. ஆர். செல்வராஜ் | 4.61 அதிகம் |
| 6 | 16270/05/ எம்.டி.2 | வார்டு எண் 65-க்குட்பட்ட ராமசாமி நகர், நல்லாம்பாளையம் மற்றும் சங்கனூர் பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் அபிவிருத்திப்பணிகள் செய்தல் | 1.40 | 13.7.07 ஐந்தாம் அழைப்பு | திரு. எஸ் விஜயகுமார் டேவிட்சன் | 4.70 அதிகம் |
| 7 | 17008/05/ எம்.டி.2 | வார்டு எண் 11-க்குட்பட்ட வரதராஜபுரம் நடுநிலைப்பள்ளியில் கழிவறை கட்டுதல் | 5.00 | 13.7.07 ஆறாம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 4.82 அதிகம் |
| 8 | 133324/06/ எம்.டி.2 | வார்டு எண் 10-க்குட்பட்ட காந்திநகரில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 5.00 | 11.7.07 ஆறாம் அழைப்பு | தி/ள். எம்.எஸ் இஞ்சினியர்ஸ் | 4.94 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 8152/05/ எம்.டி.2 | வார்டு எண் 5-க்குட்பட்ட ஒண்டிப்புதூர் ஆஞ்சநேயர் காலனியில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 3.70 | 11.7.07<br><br>ஒன்பதாம் அழைப்பு | திரு.கே.கோவிந்தராஜ் | 4.58 அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | 9750/05/ எம்.டி.2 | வார்டு எண் 21-ல் உள்ள புலியகுளம் பாலசுப்பிரமணியா நகரில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 8.00 | 13.7.07 ஐந்தாம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 4.78 அதிகம் |
| 11 | 7828/05/ எம்.டி.2 | வார்டு எண் 6-க்குட்பட்ட அம்பேத்கார் நகரில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 2.25 | 11.7.07 எட்டாம் அழைப்பு | திரு.கே.கோவிந்தரா ஜ் | 4.43 அதிகம் |
| 12 | 9747/05/ எம்.டி.2 | வார்டு எண் 14-க்குட்பட்ட உடையாம்பாளையம் காந்திநகரில் சமுதாயக்கூடம் மற்றும் சத்துணவு கூடம் கட்டுதல் | 5.20 | 13.7.07 ஆறாம் அழைப்பு | திருமதி.கே.பங்கஜம் | 4.97 அதிகம் |
| 13 | 8126/05/ எம்.டி.2 | வார்டு எண் 5-க்குட்பட்ட ஒண்டிப்புதூர் ஆஞ்சநேயர் காலனியில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 10.00 | 13.7.07 எட்டாம் அழைப்பு | திருமதி.கே.பங்கஜம் | 4.96 அதிகம் |
| 14 | 18081/05/ எம்.டி.2 | வார்டு எண் 7-க்குட்பட்ட கள்ளிமடை பகுதியில் பெண்களுக்கு பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 5.00 | 11.7.07 ஐந்தாம் அழைப்பு | தி/ள்.எஸ்.ஆர். இஞ்சினியா்ஸ் & பில்டா்ஸ் | 4.95 அதிகம் |
| 15 | 18080/05/ எம்.டி.2 | வார்டு எண் 7-க்குட்பட்ட மேற்கு மார்க்கெட் வீதியில் பெண்களுக்கான பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 5.00 | 11.7.07 ஐந்தாம் அழைப்பு | திருமதி.கே.பங்கஜம் | 4.95 அதிகம் |
| 16 | 9765/05/ எம்.டி.2 | வார்டு எண் 11-க்குட்பட்ட கமலாமில்குட்டையில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 2.20 | 11.7.07 ஆறாம் அழைப்பு | திருமதி. வி.பாக்கியம் | 4.74 அதிகம் |
| 17 | 17594/05/ எம்.டி.2 | வார்டு எண் 21-க்குட்பட்ட புலியகுளம் கருப்பராயன் கோயில் வீதியில் பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | 5.00 | 13.7.07 ஐந்தாம் அழைப்பு | திரு.எஸ்.முத்துராஜா | 3.78 அதிகம் |
| 18 | 8132/05/ எம்.டி.2 | வார்டு எண் 6-க்குட்பட்ட அன்னை சத்தியா நகரில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 2.75 | 11.7.07 ஒன்பதா ம் அழைப்பு | திரு.கே.கோவிந்தரா ஜ் | 4.52 அதிகம் |
| 19 | 9761/05/ எம்.டி.2 | வார்டு எண் 4-ல் உள்ள மதுரைவீரன் கோயில் வீதியில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 2.20 | 11.7.07 ஏழாம் அழைப்பு | திரு.கே.கோவிந்தரா ஜ் | 4.42 அதிகம் |
| 20 | 9766/05/ எம்.டி.2 | வார்டு எண் 11-க்குட்பட்ட கக்கன் நகரில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 2.00 | 11.7.07 ஏழாம் அழைப்பு | திருமதி.வி.பாக்கியம் | 4.74 அதிகம் |
| 21 | 11385/05/ எம்.டி.2 | வார்டு எண் 17-க்குட்பட்ட பட்டாளம்மன் கோயில் வீதியில் சமுதாயக்கூடம் கட்டுதல் | 6.50 | 13.7.07 நான்கா ம் அழைப்பு | தி/ள்.கே.சி.பி. இஞ்சினியா்ஸ் & பேபரிகேட்டா்ஸ் | 4.85 அதிகம் |
| 22 | 837/07/ எம்.டி.3 | வார்டு எண் 20-க்குட்பட்ட பீமநாராயணன் தோட்டசாலை , செங்காடு பகுதியில் சட்டமன்ற உறுப்பினா் நிதியின் கீழ் தார்தளம் அமைத்தல் | 3.10 | 10.7.07 நான்கா ம் அழைப்பு | திரு.கே.மாரப்பன் | 3.78 அதிகம் |
| 23 | 2385/07/ எம்.டி.3 | வார்டு எண் 24-க்குட்பட்ட கன்னிகாபரமேஸ்வரி லேஅவுட்டில் சட்டமன்ற உறுப்பினா் நிதியின் கீழ் தார்தளம் அமைத்தல் | 2.00 | 10.7.07 மூன்றா ம் அழைப்பு | திரு.எ.வெங்கடாசலம் | 4.59 அதிகம் |

**மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது**

**<u>அலுவலகக் குறிப்பு</u> - வரிசை எண் 1 உள்ள பணியின் மதிப்பீடு மாமன்ற அனுமதி வரம்பிற்குள் வருவதாலும் வரிசை எண் 2முதல் 23 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும் , மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய**

அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் , அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4362/07/எம்.டி2.

மாநகர மன்ற தீர்மான எண் 101 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 19

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தளம் 1,2,3,4 ஆகியவற்றில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் 2007- 08 ம் ஆண்டிற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை திரு.C.செல்வம் என்பவருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.14,55,000/- அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 299. நாள்.30.3.07 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி குத்தகைதாரருக்கு. ஷை கழிப்பிடத்தில் ஏல நிபந்தனைகள்படி மலம்,லம் கழிக்க ரூ1/ம் குளிப்பதற்கு ரூ2/-ம் வசூலிக்கபட வேண்டும் எனவும் இதற்கு உரிய கட்டண ரசீதுகள் மாநகராட்சி முதத்திரையிட்டு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 31.3.2007 ல் உரிமம் ஒப்படை செய்யப்பட்டது.

மேற்படி கழிப்பிடத்தை தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழிக்குழு 12.7.07 ம் தேதியில் ஆய்வு செய்ததில் மேற்படி ஏலதாரர் கழிப்பிடத்தில் வசூல் செய்யப்படும் கட்டணங்களுக்குரிய இரசீதுகளில் மாநகராட்சியின் முத்திரை இல்லாமல் அளித்து வந்துள்ளார்.

மேலும் மேற்படி கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை காட்டிலும் கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக புகார் வரப்பட்டதன் அடிப்படையில் ஏலதாரரை பலமுறை எச்சரிக்கை செய்யப்பட்டும் ,ஏலதாரர் மீண்டும் இது போன்ற தவறுகளை செய்து வந்துள்ளார். மேலும் மேற்படி கழிப்பிடத்தை தூய்மையாக பராமரிக்காமல் இருந்துள்ளார்.

எனவே மாநகராட்சி ஏல நிபந்தனைகளை மீறி குத்தகைதாரர் செயல்பட்டுள்ளதால் பொது ஏல நிபந்தனை எண் 19மற்றும் 36ன்படி மேற்படி குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் குத்தகைதாரர் மேற்படி குத்தகை இனத்திற்கு செலுத்தப்பட்ட உரிமைத்தொகையில் தற்பொழுது மீதமுள்ள தொகையில் 50 சதவீதத்தினை பறிமுதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு மன்ற பொருள் சமர்ப்பிககப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - 1 அனுமதிக்கலாம்
2. இவ்வினத்தை மறு ஏலம் விடப்படும் காலம் வரை துறை முலம் வசூல் செய்யவும் அதற்கான ரசீது புத்தகங்களை அச்சிட்டு பெறலாம்.

ந.க.எண் 12467/06/அ 10

மாநகர மன்ற தீர்மான எண் 102 நாள் 24.09.07

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 20

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனங்களுக்கு 2007- 08 ம் ஆண்டிற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை திருமதி.ஆர்.மீனாள் என்பவருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.13,10,090/- அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 299. நாள்.30.3.07 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி குத்தகைதாரருக்கு. ஷை வாகன நிறுத்துமிடத்தில் ஏல நிபந்தனைகள்படி நாளொன்றுக்கு சைக்கிளுக்கு ரூ1/--ம் ஸ்கூட்டர்,பைக் ஒன்றிற்கு ரூ3/--ம் வசூலிக்கபட வேண்டும் எனவும் இதற்கு உரிய கட்டண ரசீதுகள் மாநகராட்சி முததிரையிட்டு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 31.3.2007 ல் உரிமம் ஒப்படை செய்யப்பட்டது.

மேற்படி வாகன நிறுத்துமிடத்தை தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழிக்குழு 12.7.07 ம் தேதியில் ஆய்வு செய்ததில் மேற்படி ஏலதாரர் வாகன நிறுத்துமிடத்தில் வசூல் செய்யப்படும் கட்டணங்களுக்குரிய இரசீதுகளில் மாநகராட்சியின் முத்திரை இல்லாமல் அளித்து வந்துள்ளார்.

மேலும் மேற்படி வாகனம் நிறுத்துமிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை காட்டிலும் கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக புகார் வரப்பட்டதன் அடிப்படையில் ஏலதாரரை பலமுறை எச்சரிக்கை செய்யப்பட்டும் ,ஏலதாரர் மீண்டும் இது போன்ற தவறுகளை செய்து வந்துள்ளார். மேலும் மேற்படி வாகன நிறுத்துமிடத்தை தூய்மையாக பராமரிக்காமல் இருந்துள்ளார்.

எனவே மாநகராட்சி ஏல நிபந்தனைகளை மீறி குத்தகைதாரர் செயல்பட்டுள்ளதால் பொது ஏல நிபந்தனை எண் 19மற்றும் 36ன்படி மேற்படி குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் குத்தகைதாரர் மேற்படி குத்தகை இனத்திற்கு செலுத்தப்பட்ட உரிமைத்தொகையில் தற்பொழுது மீதமுள்ள தொகையில் 50 சதவீதத்தினை பறிமுதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு மன்ற பொருள் சமா்ப்பிகைப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு-</u> 1. அனுமதிக்கலாம்

2. இவ்வினத்தை மறு ஏலம் விடப்படும் காலம் வரை துறை மூலம் வசூல் செய்யவும் அதற்கான ரசீது புத்தகங்களை அச்சிட்டு பெறலாம்.

ந.க.எண் **12467/06/அ 10**

<u>மாநகர மன்ற தீர்மான எண் 103 நாள் 24.09.07</u>

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் ஆர்.வி ஹோட்டல் எதிர்புறம் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் 2007- 08 ம் ஆண்டிற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை திரு.ராஜா என்பவருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.8,02,008/- அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 299. நாள்.30.3.07 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி குத்தகைதாரருக்கு, ஷை கழிப்பிடத்தில் ஏல நிபந்தனைகள்படி மலம்,ஜலம் கழிக்க ரூ1/--ம் குளிப்பதற்கு ரூ2/--ம் வசூலிக்கப்பட வேண்டும் எனவும் இதற்கு உரிய கட்டண ரசீதுகள் மாநகராட்சி முத்திரையிட்டு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 31.3.2007 ல் உரிமம் ஒப்படை செய்யப்பட்டது.

மேற்படி கழிப்பிடத்தை தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழிக்குழு 12.7.07 ம் தேதியில் ஆய்வு செய்ததில் மேற்படி ஏலதாரர் கழிப்பிடத்தில் வசூல் செய்யப்படும் கட்டணங்களுக்குரிய இரசீதுகளில் மாநகராட்சியின் முத்திரை இல்லாமல் அளித்து வந்துள்ளார்.

மேலும் மேற்படி கழிப்பிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை காட்டிலும் கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக புகார் வரப்பட்டதன் அடிப்படையில் ஏலதாரரை பலமுறை எச்சரிக்கை செய்யப்பட்டும் ,ஏலதாரர் மீண்டும் இது போன்ற தவறுகளை செய்து வந்துள்ளார். மேலும் மேற்படி கழிப்பிடத்தை தூய்மையாக பராமரிக்காமல் இருந்துள்ளார்.

எனவே மாநகராட்சி ஏல நிபந்தனைகளை மீறி குத்தகைதாரர் செயல்பட்டுள்ளதால் பொது ஏல நிபந்தனை எண் 19 மற்றும் 36ன்படி மேற்படி குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் குத்தகைதாரர் மேற்படி குத்தகை இனத்திற்கு செலுத்தப்பட்ட உரிமைத்தொகையில் தற்பொழுது மீதமுள்ள தொகையில் 50 சதவீதத்தினை பறிமுதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு மன்ற பொருள் சமா்ப்பிகைப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - 1 அனுமதிக்கலாம்

2. இவ்வினத்தை மறு ஏலம் விடப்படும் காலம் வரை துறை முலம் வசூல் செய்யவும் அதற்கான ரசீது புத்தகங்களை அச்சிட்டு பெறலாம்.

ந.க.எண் 12467/06/அ 10

மாநகர மன்ற தீர்மான எண் 104 நாள் 24.09.07

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 22

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் இருசக்கர வாகனங்களுக்கு 2007- 08 ம் ஆண்டிற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை திரு.எ.சி.ராஜ்குமார் என்பவருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.7,00,500/- அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 299. நாள்.30.3.07 ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி குத்தகைதாரருக்கு, ஷை வாகன நிறுத்துமிடத்தில் ஏல நிபந்தனைகள்படி நாளொன்றுக்கு சைக்கிளுக்கு ரூ1/--ம் ஸ்கூட்டர், பைக் ஒன்றிற்க்கு ரூ3/--ம் வசூலிக்கபட வேண்டும் எனவும் இதற்கு உரிய கட்டண ரசீதுகள் மாநகராட்சி முததிரையிட்டு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் 31.3.2007 ல் உரிமம் ஒப்படை செய்யப்பட்டது.

மேற்படி வாகனம் நிறுத்துமிடத்தை தமிழ்நாடு சட்டமன்ற உறுதிமொழிக் குழு 12.7.07' ம் தேதியில் ஆய்வு செய்ததில் மேற்படி ஏலதாரர் வாகன நிறுத்துமிடத்தில் வசூல் செய்யப்படும் கட்டணங்களுக்குரிய இரசீதுகளில் மாநகராட்சியின் முத்திரை இல்லாமல் அளித்து வந்துள்ளார்.

மேலும் மேற்படி வாகனம் நிறுத்துமிடத்தில் மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை காட்டிலும் கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக புகார் வரப்பட்டதன் அடிப்படையில் ஏலதாரரை பலமுறை எச்சரிக்கை செய்யப்பட்டும் ,ஏலதாரர் மீண்டும் இது போன்ற தவறுகளை செய்து வந்துள்ளார். மேலும் மேற்படி வாகன நிறுத்துமிடத்தை தூய்மையாக பராமரிக்காமல் இருந்துள்ளார்.

எனவே மாநகராட்சி ஏல நிபந்தனைகளை மீறி குத்தகைதாரர் செயல்பட்டுள்ளதால் பொது ஏல நிபந்தனை எண் 19 மற்றும் 36ன்படி மேற்படி குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் குத்தகைதாரர் மேற்படி குத்தகை இனத்திற்கு செலுத்தப்பட்ட உரிமைத்தொகையில் தற்பொழுது மீதமுள்ள தொகையில் 50 சதவீதத்தினை பறிமுதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு மன்ற பொருள் சமர்ப்பிகப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- 1. அனுமதிக்கலாம்

2. இவ்வினத்தை மறு ஏலம் விடப்படும் காலம் வரை துறை முலம் வசூல் செய்யவும் அதற்கான ரசீது புத்தகங்களை அச்சிட்டு பெறலாம்.

ந.க. எண் 12467/06/அ 10

மாநகர மன்ற தீர்மான எண் 105 நாள் 24.09.07

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 23

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - பொது சுகாதாரப் பிரிவு - திடக்கழிவு மேலாண்மை பணி - லாரிகள் மற்றும் டிராக்டர்களைக் கொண்டு குப்பைகளை அகற்றும் பணி 31.05.2007 உடன் முடிவடைந்தது - குப்பைகளை சேகரிக்கும் தொட்டிகள், தளவாடங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஒப்பந்தப்புள்ளி முடிவு - நிர்வாக காரணங்களால் காலதாமதம் ஏற்படுவதால் ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை கால நீடிப்பு செய்வது - சம்பந்தமாக.

பார்வை - 1.ஆணையர் அவர்களின் செயல்முறைகள் எண்.6801/2003/ எம்.இ.4. நாள். 13.10.2003.

2.ஆணையரது உத்திரவு எண்.11621/2004/எம்.இ.4. நாள். 11.10.2004.

3. மாமன்றத் தீர்மான எண். 57. நாள். 30.06.2005.

4. ஆணையர் அவர்களின் 21.04.2007ந் தேதிய குறிப்பு.

5. மாநகர நல அலவலர் அவர்களின் 29.05.2007ம் தேதிய குறிப்பு.

6. மாநகரப் பொறியாளர் அவர்களின் 02.07.2007ம் தேதிய குறிப்பு.

7. ஆணையரது உத்திரவு எண். 819/2005/எம்.இ.4. நாள். 09.03.2005.

----------

பார்வை 1-ல் கண்ட ஆணையர் அவர்களின் செயல்முறைகளின்படி 53 டிப்பர் லாரிகளைக் கொண்டு குப்பைகள் அகற்றும் பணியைச் செய்ய தி/வா.ராஜ கணபதி டிரேடர்ஸ், மேட்டூர் டேம், சேலம். அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டது.

பார்வை 2-ல் கண்ட ஆணையரது உத்தரவின்படி மறு உத்தரவு வரும் வரை மேற்படி பணியைச் செய்ய நீட்டிப்பு வழங்கப்பட்டது.

பார்வை 3-ல் கண்ட மாமன்ற தீர்மான எண் 57 நாள். 30.06.2005ன் படி மறு உத்திரவு வரும் வரை அல்லது தேவையான காலத்திற்கு நீட்டிப்பு வழங்கலாம் என உத்திரவு வழங்கப்பட்டது.

பார்வை 4-ல் கண்ட ஆணையர் அவர்களின் 21.04.2007ம் தேதிய உத்திரவின்படி 31.05.2007 மேற்படி பணியைச் செய்யலாம் என நீட்டிப்பு உத்திரவு வழங்கப்பட்டது

பார்வை 5-ல் கண்ட குறிப்பின்படி, மேற்படி பணி 31.05.2007 உடன் முடிவடைவதால் மேற்படி பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க பொறியாளருக்கு குறிப்பு அனுப்பபட்டது.

பார்வை 6ல் கண்ட மாநகர பொறியர் தன்னுடைய 02.07.2007ந் தேதிய குறிப்பில் குப்பை சேகரிப்பு தொட்டிகள் தளவாடங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஒப்பந்தப்புள்ளி முடிவு ஆகியன சில நிர்வாக காரணங்களால் காலதாமதம் ஆவதினாலும், ஏற்கனவே ஒப்பந்தத்தில் உள்ள டிப்பர் லாரிகள் மற்றும் டிராக்டர்களைக் கொண்டு வாடகை அடிப்படையில் குப்பை அகற்றும் காலம் ஏற்கனவே 31.05.2007 அன்று முடிவடைந்து விட்டபடியாலும், நகரின் சுகாதாரம் மற்றம் சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை நீட்டித்துக் கொள்ள மாமன்றத்தின் உத்தரவு வேண்டி பொருள் வைக்கும் படி நகர நல அலுவலருக்கு குறிப்பு அனுப்பப்பட்டது.

அதன்படி மறு உத்திரவு வரும் வரை நீட்டித்து கொள்ளவும், மேற்படி ஒப்பந்ததாரர் தி/வா.ராஜகணபதி டிரேடர்ஸ், மேட்டூர் டேம், சேலம் அவர்களை ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிபந்தனைகளின் படி பணி செய்யவும், குப்பைகளை அகற்ற பயன்படுத்தும் தனியார் டிப்பர் டிராக்டர்களை இயக்கி வரும் ஒப்பந்ததாரர் தி/வா. சப்தகிரி டிரேடர்ஸ் அவர்களை ஏற்கனவே உள்ள ஒப்பந்த நிபந்தனைகளின்படி மறு உத்திரவு வரும் வரை பணி செய்யவும், ஒப்பந்தங்களை நீட்டித்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆணையர் அவர்களின் 21.04.2007ந் தேதிய உத்தரவின் படி பொறியியல் பிரிவில் குப்பைகளை அகற்றுவதுற்கு டெண்டர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மாநகரப் பொறியாளர் தன்னுடைய 02.07.2007ந் தேதிய குறிப்பில் ஏற்கனவே ஒப்பந்தத்தில் உள்ள டிப்பர் லாரிகள் மற்றும் டிராக்டர்களை கொண்டு வாடகை அடிப்படையில் குப்பை அகற்றும் காலம் 31.05.2007 அன்று முடிவடைந்துவிட்டபடியாலும் நகரின் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை மறு உத்திரவு வரும் வரை நீட்டித்துக் கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. மேலும், இதற்கான செலவினத்திற்கும் உத்திரவு வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> -அனுமதிக்கலாம். ந.க.எண் . 6801/2007/எம்.இ.4.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 106  நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.  இனிவரும் காலங்களில் சுகாதார நிலைக்குழுவின் ஒப்புதலுடன் மன்றத்திற்கு சமர்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 24

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம் வார்டு எண் 27-க்குட்பட்ட அவினாசி சாலையில் உள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் அமையவுள்ள மண்டல பாஸ்போர்ட் அலுவலத்திற்கு தெற்குப்புற பகுதியில் முதல் தளம் அமைக்க மதிப்பீடு ரூ 25,00,000 /-க்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே இம்மதிப்பிட்டீற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்.  ந.க.எண் 12857/07/MD4

<u>மாநகர மன்ற தீர்மான எண் 107  நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண். 25

திரு.சின்னசாமி மற்றும் இருவர் கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.26, அவனாசி சாலை மற்றும் காமராஜர் சாலை சந்திப்பில் நகரளவு எண்.10/1086/1ஏ-ல் 17105 ச.அடி நிலத்தை குடியிருப்புப் பகுதியிலிருந்து வணிக நில உபயோக மாற்ற அனுமதி கோரி, நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னைக்கு உரியவழி முறையில் பெறப்பட்ட விண்ணப்பம் நாள் 27.7.2007 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் மனையிடம்,கோவை மாநகராட்சி அங்கீகரிக்கப்பட்ட ந.அ.திட்டம் எண்.1-ல் அமைந்துள்ளது. மனுதாரரின் மனையிடத்தின் முன்புறமுள்ள 100-0" சாலை, மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. அவனாசி சாலையிலிருந்து 100'-0" தூரத்திற்கு வணிக பகுதியாக உபயோகிக்கலாம். மனையிடம் 190'-0" நீளம் உள்ளதால் 90'-0" நீளம் குடியிருப்புப் பகுதியில் அமைகிறது. மனுதாரர் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள (சுமார் 8236 ச.அடி பரப்பினை) பகுதியினை வணிக உபயோக பகுதியாக மாற்றம் கோரியுள்ளார். மனையிடம் வணிக உபயோகத்திற்கு ஏற்ற இடமாக உள்ளது. எனவே குடியிருப்பு நில உபயோகத்திலிருந்து வணிக பகுதியாக மாற்றம் கோரும் கருத்துருக்களை நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தீர்மான எண்.33 நாள் 5.9.2007-ல் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - ஒப்புதல் செய்யலாம்.  (ந.க. எண். 11314/ 2007/ கிஎச்.2)

<u>மாநகர மன்ற தீர்மான எண் 108  நாள் 24.09.07</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 5.09.2007 ம் தேதிய தீர்மானம் எண்.33 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண். 26

கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.14-ல் டாக்டர் கே.சி. ராமசாமி, மேலாண்மை இயக்குநர், வாங்கல் அம்மன் ஹெல்த் சர்வீஸ் லிமிடெட், கோவை அவர்களின் 11.5.2007-ம் தேதிய விண்ணப்பத்தில் சௌரிபாளையம் கிராமம், க.ச.எண்.522, 523/3-ல் உள்ள 1 ஏக்கர் 83.52 சென்ட் நிலத்தினை குடியிருப்பு நில உபயோகத்தில் இருந்து பொது உபயோக மாற்றம் செய்து வழங்குமாறு கோரியுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனையிடம் சௌரிபாளையம், உடையாம்பாளையம் ரோட்டில், நவ இந்தியா சந்திப்பின் தென்புறம் அமைந்துள்ளது. மேற்படி இடத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர், கோவை உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் கோவை மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெற்று நர்சிங்ஹோம் கட்டிடம் கட்டுமான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.20-ன்படி, க.ச.எண்.522, 523 பாகம் குடியிருப்புப் பகுதியிலும், பப்ளிக் மற்றும் செமி பப்ளிக் பகுதியிலும் அமைகிறது. மேற்படி மனையிடத்திற்கு 40அடி அகல சாலை அணுகுபாதையாக உள்ளது. மனுதாரர் மனையிடத்தில் நவீன மருத்துவமனை கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளார்.

எனவே மேற்படி இடத்தினை குடியிருப்புப் பகுதி உபயோகத்திலிருந்து பொது உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் 16.7.2007-ம் தேதிய தீர்மான எண்.27-ல் நர்சிங் ஹோம் கட்டிடம் கட்ட உத்தேசம் பெறப்பட்டு மருத்துவமனையாக மாற்றம் செய்யும்போது, கட்டிட விதிகளை நிறைவு செய்யுமா என ஆராய்ந்து குறிப்பு கோரியதில், கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை மருத்துவமனையாக மாற்றும்பொழுது கட்டிட விதிகளை சம்பந்தப்பட்ட கட்டிடம் பாதிக்காது என்பதால், மேற்படி பொருள் குறித்து முடிவெடுக்க நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் தனது தீர்மான எண்.32 நாள் 5.9.2007-ல் நில உபயோக மாற்றம் செய்ய மன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - ஒப்புதல் செய்யலாம். ( ந.க. எண். 7752/2007/ கிஎச்.1)

<u>மாநகர மன்ற தீர்மான எண் 109 நாள் 24.09.07</u>

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் 5.09.2007 ம் தேதிய தீர்மானம் எண்.32 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 27

பொருள் கல்வி – நிர்வாகம் - கோவை மாநகராட்சி – மாநகராட்சிப் பள்ளிகளில் Pre-KG, LKG, UKG, மற்றும் 1 முதல் 12-ம் வகுப்பு வரை ஆங்கிலவழி பயிற்சி வகுப்புகள் துவங்குவது – தொடர்பாக.

------

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் 02-08-2007ம் நாளது கூட்டத்தில், குழு உறுப்பினர்களால் வழங்கப்பட்ட ஆலோசனைகளில், மாநகராட்சிப் பள்ளிகளில் Pre-KG, LKG, UKG, மற்றும் 1 முதல் 12-ம் வகுப்பு வரை ஆங்கில வழி வகுப்புகள் துவங்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசு செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை அவர்களது கடித எண்.11754/எஸ்2/99-நாள் 23-10-2001-ல் நடைமுறையிலுள்ள அரசு ஆணைகளின்படி தமிழ்வழி கல்வியில் தான் துவக்க நிலையில் வகுப்புகள் இருக்க வேண்டுமெனவும். கோவை மாநகராட்சிப் பள்ளிகளில் எல்.கே.ஜி, யு.கே.ஜி. மற்றும் 1-5 வகுப்பு வரை ஆங்கில வழிப் பள்ளிகள் தொடங்குவதற்கான இவ்வலுவலக கருத்துருவை அரசு ஏற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமன்ற தீர்மான எண்.403 நாள் 28-02-2002-ல் மேற்காண் பதிவுகளை மாமன்ற பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கல்விக்குழுவின் கருத்தின்படி, Pre-KG, LKG, UKG, மற்றும் 1முதல் 5 வகுப்புவரை ஆங்கில வழிக் கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கவும் மற்றும் மாநகராட்சி உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை அரசு உதவியுடன் ஆங்கில வழிக் கல்வி செயல்படுத்தப்பட்டு வரும் கீழ்காணும் பள்ளிகள் தவிர மற்ற பள்ளிகளில்

ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் துவக்கவும் மீண்டும் மாமன்ற அனுமதி பெற்று அரசுக்கு விண்ணப்பிக்க மாமன்ற ஒப்புதலுக்கு.

அரசு உதவி – ஆங்கில வழிக்கல்வி

1. இர.ச.புரம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
2. இர.ச.புரம் (மே) பெண்கள் மேல்நிலைப்பள்ளி
3. சிட்டி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி
4. சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி
5. மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி அரங்கநாதபுரம்.
6. மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி இராமகிருஷ்ணாபுரம்.
7. மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒப்பணக்காரவீதி.
8. மாநகராட்சி எஸ்.ஆர்.பி.அம்மணியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி.
9. அனுப்பர்பாளையம் உயர்நிலைப்பள்ளி.

<u>அலுவலகக் குறிப்பு</u> -ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 1128/07/ கே 9

<u>மாநகர மன்ற தீர்மான எண் 110 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண்-28

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 10-ல் உள்ள ஜி.வி. குடியிருப்பில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய உள் விளையாட்டு அரங்கம் சுமார் ரூ.120.00 இலட்சம் செலவில் அமைக்க திட்டமிடப்படடு, அதில் 75% தொகை மத்தியஅரசின் மானியமும், மீதமுள்ள 25% தொகை மாநகராட்சி நிதியிலிருந்து செலவினம் செய்துக் கொள்ளவும் 2002-2003-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்

இதன்படி இத்திட்டம் குறித்து மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் உதவி இயக்குநர் அவர்களுடன் விவாதிக்கப்பட்டு அரசால் அனுமதி வழங்கப்பட்ட, மாதிரி திட்ட வரைபடம் மற்றும் மதிப்பீட்டினை மாநகராட்சியில் நடப்பு நிதியாண்டு விலைவிகிதப்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திட்ட மதிப்பீட்டு தொகையான ரூ. 120.00 இலட்சத்தில் 75 சதவீதம் (ரூ. 90.00 இலட்சம் ) மத்திய அரசு மானியம் பெறவும், மீதமுள்ள 25 சதவீதம் ( ரூ. 30.00 இலட்சம் ) மாநகராட்சி நிதியில் இருந்து செலவு செய்து கொள்ளவும் முடிவு செய்து இது குறித்து இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி பெறுவதற்குரிய பிரேரணை தயார் செய்து மாவட்ட விளையாட்டு அலுவலர் மூலம் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு ஆணையம், சென்னை மற்றும் விளையாட்டுத் துறை செயலர் அவர்களது பரிந்துரையுடன் மத்திய அரசிடம் 75 சதவீதம் மானியம் பெறுவதற்கு உரிய பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ஒப்புதலுடன் அரசுக்கு அனுப்பி வைக்கவும் 25 சதவீத தொகையான ரூ. 30.00 இலட்சத்தை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும், மாமன்றத்தில் மாமன்றத் தீர்மான எண் . 337 நாள் 30.01.2003-ல் ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கண்ட மாமன்றத் தீர்மானத்தினை தொடர்ந்து அனைத்து திட்ட மதிப்பீடும் மத்திய அரசின் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது. திட்ட மதிப்பீடுகளை பரிசீலித்து அதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்திட கேட்டு மத்திய அரசிடம் இருந்து 5.01.2004-ல் கடிதம் மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டு இருந்தது. இதன் பேரில் மதிப்பீட்டில் மேலும் தேவையான விபரங்களை தெரிவித்து நிவர்த்தி செய்யப்பட்ட மதிப்பீடு 26.03.2004-ல் மத்திய அரசிற்கு உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டுத்துறை ஆணையம் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது. திருத்திய மதிப்பீட்டிலும் சில குறைபாடுகள் தெரிவித்து அவற்றினை சரி செய்து அனுப்பி வைக்க கேட்டு மத்திய அரசு செயலகத்தில் இருந்து 22.09.2004-கடிதம் மாநகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது. மத்திய அரசு செயலகத்தில் இருந்து குறிப்பிட்டுள்ள குறைபாடுகளை சரி செய்து திருத்திய மதிப்பீடு மத்திய அரசிற்கு அனுப்பி வைக்க செயலர், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை அலுவலகத்திற்கு 17.12.2004-ல் அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழக அரசு விளையாட்டுத் துறை செயலர் அவர்களது 31.03.2005 தேதிய கடிதத்தில் 1.04.2005 முதல் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தக்கூடிய அனைத்து திட்டங்களும் 2005 – 2006 ஆம் ஆண்டு திட்டத்தில் உரிய ஒதுக்கீடு செய்யப்படாததால்

மாநில அரசின் சம்மந்தப்பட்ட இலாகா மூலமே நிறைவேற்றிட கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர் மாவட்ட விளையாட்டு மையம் அவர்களின் ஆலோசனையின்படி மாவட்ட விளையாட்டுக் குழு 23.06.2007-ம் தேதி தல ஆய்வு செய்யப்பட்டு ஜி.வி. ரெஸிடென்ஸி பொது ஒதுக்கீடு இடத்தில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு மானியம் பெற உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுக்கவும் அரசு உறுதிமொழி எண் 524 / 05-ல் ஜி.வி.ரெஸிடென்ஸி குடியிருப்பு உள்விளையாட்டு அரங்கம் அமைப்பது பற்றி 13-07-2007-ல் நடைபெற்ற அரசு உறுதிமொழி குழு பரிந்துரையின்படி இத்திட்டம் குறித்து மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் உதவி இயக்குனர் அவர்களிடம் விவாதிக்கப்பட்டு அரசால் அனுமதி வழங்கப்பட்ட மாதிரி திட்ட வரைபடம் மற்றும் மதிப்பீட்டினை மாநகராட்சியின் 2007-2008 ஆண்டு விலை விகிதப்படி மதிப்பீடு ரூ. 160.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தேச விளையாட்டு அரங்கில் கூடைபந்து, கைப்பந்து, இறகுபந்து, டேபிள் டென்னீஸ், சதுரங்கம், கேரம், நவீன உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கராத்தே பயிற்சி ஆகிய விளையாட்டுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ. 160 இலட்சம் மதிப்பிலான இந்த திட்டப்பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் இந்த திட்டத்திற்குன்டான பிரேரணைகள் தயார் செய்து மாவட்ட விளையாட்டு அலுவலர் மூலம் உறுப்பினர் செயலாளர் தமிழ்நாடு விளையாட்டு ஆணையம் சென்னை மற்றும் உள் விளையாட்டுத் துறை செயலர் அவர்களது பரிந்துரையுடன் அரசிடம் மானியம் பெறுவதற்கு உரிய பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ஒப்புதலுடன் அரசின் நிர்வாக அனுமதிக்காக அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண். 15386/02/எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மான எண் 111 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :29

பொருள் வணிகவளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் -நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1 மற்றும் 2- உரிமம் ரத்து செய்தல் -தொடர்பாக.

--------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.24, பகுதியில் அமைந்துள்ள நஞ்சுண்டாபுரம் ரோடு மாநகராட்சி வணிக வளாக கடை எண்.1 மற்றும் 2-ஐ மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.4,200/- அடிப்படையில் Tvl. M.M.Digital & Signs என்ற நிறுவனத்தாருக்கு மாமன்ற தீர்மான எண்.126 நாள் 29.8.2005-ன்படி, 14.9.2005 முதல் 31.8.2008 வரை மூன்றாண்டுகளுக்கு ஒப்படை செய்யப்பட்டது.

குத்தகை விதிகளின்படி குத்தகைதாரரிடமிருந்து மேற்படி கடைகளுக்கான உரிமக்கட்டணம் முன்பணமாக கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வசூல் செய்யப்பட்டுள்ளது.

வைப்புத் தொகை - ரூ. 50,000/-

(கடை ஒன்றிற்கு ரூ.25,000 வீதம்)

ஓராண்டுக்கான உரிமக் கட்டணம் முன்வைப்புத்தொகை - ரூ.1,00,800/-

(கடை ஒன்றிற்கு ரூ.50,400 வீதம்)

குத்தகைதாரரான Tvl.M.M.Digital&Signs நிறுவனத்தாரால் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர உரிமக் கட்டணம் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது

<u>செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை</u>

கடை எண்.1 (பிப்ரவரி 2006 முதல் ஆகஸ்ட் 2007 முடிய) - ரூ. 79,800/-

கடை எண்.2 (ஜனவரி 2006 முதல் ஆகஸ்ட் 2007 முடிய) - ரூ. 84,000/-

உரிமக்கட்டண நிலுவை செலுத்தக்கோரி இவ்வலுவலக அறிவிப்புகள் வாயிலாகவும் நேரிலும் பலமுறை நினைவூட்டப்பட்டும் நாளது தேதி வரை நிலுவை ஏதும் செலுத்தப்படாமலும் கடைகள் பயன்படுத்தப்படாமல் பூட்டப்பட்டும் இருந்தது.

குத்தகைதாரர் குத்தகை விதிகளுக்கு முரணாக உரிமக்கட்டண நிலுவை செலுத்தப்படாமலும், கடைகள் பயன்படுத்தப்படாமல் பூட்டப்பட்டுள்ளதாலும், மாநகராட்சி அலுவலர்களால் 17.08.07 அன்று பூட்டி பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

எனவே Tvl. M.M.Digital & Signs நிறுவனத்தாருக்கு மாமன்ற தீர்மான எண். 126 நாள் 29.8.2005-ன் மூலம் 14.9.2005 முதல் 31.8.2008 வரையிலான மூன்றாண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் உத்திரவினை ரத்து செய்யவும். குத்தகைதாரரால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டண நிலுவைக்கு அவர் செலுத்திய முன்பணத் தொகையிலிருந்து சரிசெய்யவும். மீதமுள்ள நிலுவைக்கு சட்டபூர்வநடவடிக்கை மேற்கொண்டு வசூல் செய்யவும்.

மேலும் மேற்படி கடைகளை பொது ஏலம் , மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செலவினங்களை ஏற்றுக்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. அவசர அவசியத்தைக் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 921 / 2007 / கிஅ7

<u>மாநகர மன்ற தீர்மான எண் 112 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 30

பொருள்எண் :கோவை மாநகராட்சி-கிழக்கு மண்டல அலுவலகம்-6-வது வார்டு,சிங்காநல்லூர் கிராமம்-க.ச.எண்.118/4, 118/5ஏ, 122/1, 122/2, 126/1ஏ, 127/1, 128/1-ல் உள்ள மனையிடம் 22.48 ஏக்கரில் பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கக் கோரி திள். புர்வாங்காரா ப்ராஜெக்ட் லிமிடெட் நிறுவனத்தினரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் கருத்துருக்கள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.34-ல் அமைகிறது. மேற்படி மனையிடத்தில் உள்ள க.ச.எண். 118/4, 118/5ஏ, 122/1, 122/2, 126/1ஏ, 127/1 ஆகியவை குடியிருப்புப் பகுதியிலும், க.ச.எண். 126/1ஏ, 128 தொழிற்சாலைப் பகுதியிலும் அமைந்துள்ளது. மனுதாரரின் உத்தேசக் கட்டிடம் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ளது.

மனுதாரர் மேற்படி இடத்தினை பலமாடி குடியிருப்புப் பகுதியாக பிரகடனம் செய்யும்படி கோரியுள்ளார். இம்மனையிடத்திற்கு ப.மு.எண்.3312/2007/ஆ10 நாள் 30.3.2007-ல் வட்டாட்சியர் சான்று பெறப்பட்டுள்ளது. தீயணைப்புத் துறையின் இயக்குநர் அவர்களின் நி.மு.எண்.434/இ1/2007 நாள் 6.6.2007-ன்படியும், R.C.No.349/A2/2007 dt.10.4.2007-ன்படி பெறப்பட்டுள்ளது.

மனுதாரரால் சமர்ப்பித்துள்ள வரைபடங்களின்படி உத்தேச 920 குடியிருப்புகளுக்கும், கிளப் ஹவுஸ் அதற்கு உத்தேச கட்டுமானத்திற்கு சார்ந்த கட்டிடங்கள் ஆகும். போதுமான பிளாட் கவரேஜ், எப்எஸ்ஐ, வாகன நிறுத்துமிடம் 10 % திறந்த ஒதுக்கீடு இடம் மற்றும் பக்கவாட்டு காலியிடங்கள் கட்டிட விதியினை நிறைவு செய்கிறது.

எனினும், மனையிடத்தினை ஒட்டியுள்ள வாரிபுறம்போக்கின் தன்மை மாறாமல் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், விண்ணப்பதாரர் மத்திய சுற்றுப்புற சூழல் மற்றும் ஏர்போர்ட் அத்தாரிட்டி மற்றும் மைக்ரோவேவ் அதிகாரியிடமிருந்தும், காவல் ஆணையரிடமிருந்தும் இத்துறைகளிடமிருந்து தடையின்மைச் சான்று கோரி மனுதாரரால் ஏற்கனவே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தடையின்மை சான்றிதழ் ஆகியவை பெற்று சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பொது கட்டிடவிதி 1973-ன்படி பலமாடிக் கட்டிடம் அமையும் இடமாக விதி 4(ஏ)ன்படி அறிவிக்க கோரி மனுதாரரின் கட்டிட அனுமதி கோரி பெறப்பட்ட கருத்துருக்களை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு கோவை

உள்ளூர் திட்டக் குழுமத்தின் மூலம் அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - நிபந்தனைகளுடன் அனுப்பி வைக்கலாம் ந.க. எண். 14129/2006 /கிஎச்.1

மாநகர மன்ற தீர்மான எண் 113 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 31

கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் அவர்கள் தமது நே.மு.க. ந.க. 25334 / 99 / ஆ7 நாள் : 14.4.2007 -ல் கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம், சௌரிபாளையம் கிராமம் க.ச. எண். 428/2 வாரிபுறம்போக்கில் தி/வா எல் அண்டு டி நிறுவனம் கட்டிடம் கட்டி ஆக்கிரமணம் செய்துள்ள இடத்தினை குத்தகைக்கு வழங்க கோரியதின் பேரில் மாநகராட்சியின் கருத்தினை தீர்மான வடிவில் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

நகரளவையர் மேற்படி இடத்தினை புலத்தணிக்கை செய்து தமது குறிப்பில் கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு வட்டம், சௌரிபாளையம் கிராமம், க.ச. எண். 428 -ல் வாரிப்புறம்போக்கில் தி/வா எல் அண்ட் டி நிறுவனத்தினர் சுமார் 0.14 சென்ட் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளனர் என்றும், தற்போது உயர் நீதி மன்ற ஆணையின்படி வாரிபுறம்போக்கில் (நீர் நிலைகள் உள்ள இடத்தில்) ஆக்கிரமிப்பு இடங்களை அகற்ற வேண்டும் என்றுள்ள நிலையில் மேற்கண்ட வாரிபுறம் போக்கில் குத்தகை முன்மொழிவுகள் தயாரிக்க இயலவில்லை என தெரிவித்துள்ளனர்.

மேலும், இவ்வலுவலக கடித எண். ஒ.மு. எண். 17181/05/ எச். 2 (வ) நாள் . 14.2.2006 -ல் வாரிபுறம் போக்கு நிலம் குத்தகைக்கு விடப்படுவது குறித்து அரசாணை பொது தடை இருப்பதாலும், உயர்நீதி மன்ற உத்தரவுபடி, நீர் நிலைகள் அமைகின்ற இடத்தில் குத்தகைக்கு தர இயலாது என்றும் வட்டாச்சியர், கோயம்புத்தூர் (தெற்கு) அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி, சௌரிபாளையம் கிராமம், க.ச. எண். 428/2 வாரிபுறம்போக்கு காலையில் " தி / வா எல் அண்டு டி " நிறுவனம் கட்டிடம் கட்டி ஆக்கிரமணம் செய்துள்ள இடத்தை குத்தகைக்கு வழங்க மறுக்கலாம் என்பதை தெரிவித்து மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- குத்தகைக்கு வழங்க மறுக்கலாம். ந.க.எண் : 6782/07/H2(N).

மாநகர மன்ற தீர்மான எண் 114 நாள் 24.09.07

குத்தகைக்கு வழங்க மறுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 32

கோயம்புத்தூர் வடக்கு வட்டம், கணபதி (மேற்கு) கிராமம், புல எண். 260 /1 மற்றும் 262 / 1 ஆகியவற்றில் 0.02 ஏக்கர் வண்டிப்பாதை புறம்போக்கு நிலம் தென்னக இரயில்வே துறைக்கு இருகூர் முதல் கோயம்புத்தூர் சந்திப்பு வரை இரயில்வே இருப்புப்பாதை இரட்டிப்பு செய்யும் பணிக்கென தென்னக இரயில்வே துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டு, சென்னை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது என்றும், இந்நில உரிமை மாற்றத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சியின் இசைவினை தீர்மான வடிவில் அனுப்புமாறு மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் அவர்கள் தமது நேர்முக கடித எண். 36441/2003/ஆ.4. நாள் . 13.6.07 -ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி, கணபதி கிராமம் புல எண். 260/1 மற்றும் 262/1 -ல் உள்ள 0.02 ஏக்கர் நிலம் வண்டிப்பாதை புறம் போக்கு ஆகும். மேற்படி இடத்தினை தென்னக இரயில்வே துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லை என்பதை தெரிவிக்க மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

நில உரிமை மாற்றம் செய்ய பரிந்துரைக்கலாம். ந.க.எண் : 6129/2007/(MH5) H1(N).

<u>மாநகர மன்ற தீர்மான எண் 115 நாள் 24.09.07</u>

நிலஉரிமை மாற்றம் செய்ய பரிந்துரைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 33

கணபதி கிராமம் க.ச. எண். 393/1 பாகம், 393/2 பாகம், திரு.பி. சோமசுந்தரம் என்பவர் கணபதி விரிவு அபிவிருத்தி திட்ட எண். 2 மாநகராட்சி வார்டு எண். 72 -ல் உள்ள 60'0" பி2-பி3 சாலையை 30 அடி சாலையாக மாற்றம் செய்யவும் அவ்வாறு மாற்றம் செய்யத் தேவையான ஏற்கனவே உள்ள 23'0" உடன் 7'-0" இடம் வழங்குவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

மேற்படி இடம் சர்வே எண். 393/1 பகுதி மற்றும் 2 பகுதியில் கணபதி கிராமத்தில் சி. எம். எஸ் பள்ளியின் பின்புறமுள்ள பகுதியில் கணபதி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 2 -இல் உத்தேச 60' அடி அகல பி2-பி2 சாலையாக உள்ளது. மனுதாரரின் இடத்தை ஒட்டினாற்போல் உத்தேச 60' அகல சாலைக்குரிய நிலப்பகுதி போக 23' அகலத்தில் அனுமதியற்ற மனைப்பிரிவு சாலை உள்ளது. இச்சாலையை 30' அகல சாலையாக மாற்ற தமது இடத்திலிருந்து 7 அடி அகல பரப்பினை தானமாக தருவதாகவும், 60' அடி அகல திட்டச்சாலையின் மீதமுள்ள சாலைப்பகுதியினை நீக்கம் செய்யவும் மனுதாரர் அனுமதி கோரியுள்ளார். கீழ மேலான 60' அகலத்தில் உள்ள இச்சாலையின் மேற்கில் 80' அகல தென்வடல் புழக்க சாலையும், கிழக்கில் 50' அகல தென்வடல் திட்ட சாலையும் உள்ளன. தற்சமயம் இச்சாலையமைக்க உத்தேசித்துள்ள நிலங்கள் அனைத்தும் காலியாக உள்ளதால் இச்சாலைகளை இணைக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளது. கிழக்கு கடைசியில் உள்ள அத்திப்பாளையம் பிரிவு சாலை இணையும் பகுதியில் மட்டும் கருப்பராயன் கோயில் மற்றும் தொழிற்கூடங்கள் உள்ளதால், இந்த 60' அகல சாலையை அத்திப்பாளையம் பிரிவு சாலை வரை நீட்டிக்க இயலாது.

மனுதாரரின் கோரிக்கைப்படி சாலையை நீக்கம் செய்யாமல் அதன் அகலத்தை 60' அகலத்திலிருந்து 40' அகலமாக (23' அகல அனுமதியற்ற மனைப்பிரிவு சாலையினையும் சேர்த்து) குறைத்து இச்சாலையை அபிவிருத்தி செய்யலாம் என்று நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி குழு தனது தீர்மான எண். 34 நாள் : 5.9.2007 -ல் " மனுதாரரின் இடத்திலிருந்து 10 அடி அகல பரப்பினை மட்டும் தானமாக பெற்று சாலை அபிவிருத்தி செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> குறைந்தது 40' அகல இணைப்பு சாலையாக இருந்தால் பொதுமக்கள் அதிக பயன்பெற இயலும். எனவே 40' அகல சாலையாக அபிவிருத்தி செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

எண் : 5858 / 2007 / H2(N).

<u>மாநகர மன்ற தீர்மான எண் 116 நாள் 24.09.07</u>

விண்ணப்பதாரரின் கோரிக்கையை நிராகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. கணபதி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 2-இல் உள்ள உத்தேச 60 அடி அகல பி2-பி2 திட்ட சாலையினை அபிவிருத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

பொருள் எண் :34

மத்திய நகர் புறத்துறை அமைச்சகம், ஜவஹர்லால்நேரு நகர்புற புனரமைப்புத் திட்டம் ஒப்புதல் குழுவினரால் கோவை மாநகராட்சி ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ரூபாய் 377.13 கோடி மதிப்பீட்டிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ( Gol.No. K 14012/2/2006-NURM Dated 6.7.2007)

ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான மான்யம் மற்றும் கடனுதவி வழங்குவது பற்றி தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் தனது கடித எண் 43 , TUFIDCO / JNNURM AM(M) 2007 நாள் 20-07-2007 தேதியில் மொத்த மதிப்பீடு ரூ. 37712.88 இலட்சத்தில் வட்டியில்லா கடன் 20 விழுக்காடு ரூ 7542.58 இலட்சமும் மானியம் 50 விழுக்காடு ரூ. 18856.44 இலட்சமும் மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதனை கீழ்கண்டவாறு கொடுத்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறபுனரமைப்பு திட்ட பங்கு | | திருப்பிச் செலுத்துவதற் கான காலம் | மாநகராட்சி யின் பங்கு 30 சதவீதம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | | வட்டியில்லா கடன் 20 சதவீதம் ரூ. இலட்சத்தில் | மானியம் 50 சதவீதம் ரூ. இலட்சத்தில் | | |
| 1 | கோவை மாநகராட்சிக்குட் பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும் பணி | 37712.88 | 7542.58 | 18856.44 | 7 வருடம் | 11313.86 |

கோவை மாநகராட்சிக்கு ரூ. 7542.58 இலட்சம் (வட்டியில்லா) கடனுதவியும் மற்றும் மான்யம் ரூ. 18856.44 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 26399.02 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் வழங்க குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று மன்றத் தீர்மானம் கோரப்பட்டுள்ளதால் இது குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1. நிபந்தனைகள் ஏற்று திட்டத்தினை செயல்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.
2. மாநில அரசின் 20 சதவீதத் தொகையினை வட்டியில்லா கடனுக்கு பதிலாக முழு மான்யமாக வழங்க அரசினை கேட்டுக் கொள்ளலாம்.
3. மாநகராட்சி பங்கு 30 சதவீதத் தொகையை நிதி நிறுவனங்கிடமிருந்து கடனாக பெற்று திட்டத்தினை செயல்படுத்தலாம்.

ந.க.எண் 12069 /2006/ எம்.டி.மேன்

மாநகர மன்ற தீர்மான எண் 117 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. மாநகராட்சியின் 30 சதவீத பங்குத் தொகைக்கு தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனத்திடமிருந்து Lr.No.43/TUFIDCO/JNNURM/AM(m)/2007 dt 20.07.2007–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அந்நிறுவனத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு கடனாக

பெற்று திட்டத்தினை செயல்படுத்தலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ள இதர நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 35

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கணிணி பிரிவு -கணிணி விவரப்பதிவாளர் மற்றும் சூப்பர்வைசர்களின் ஒப்பந்தம் காலம் 16.09.2007யுடன் முடிவடைகிறது-மேலும் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டுதல்-தொடர்பாக.

இம்மாநகராட்சியின் கணிணி மையங்களில் ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சியின் விபரங்கள் கணிணி மூலம் பதிவு செய்வதற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s. KGISL, கோவை நிறுவனத்தினர் பணி மேற்கொண்டு வருகின்றனர். இந்நிறுவனத்தினரின் ஒப்பந்த காலம் 16.09.07 யுடன் முடிவடைகிறது.

இந்நிறுவனத்தினருக்கு ஒரு கணிணி விவரப் பதிவாளருக்கு மாதம் ரூ 3,175/- வீதமும் 37 விவரப் பதிவாளர்களுக்கு ரூ 14,09,700/- (ரூ 3,175 x 1 x 12 மாதங்கள்) ஒரு சூப்பர்வைசர்க்கு ரூ 7,500/- வீதம் ரூ 90,000/-( ரூ7,500 x 1 x 12) ஆக மொத்தம் ஒரு வருடத்திற்கு ரூ 14,99,700/-(வரிகள் உட்பட) வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஒரு நெட் வொர்க் பொறியாளர் 1.1.2007 முதல் ரூ 7,500/- அடிப்படையில் சேவையில் உள்ளார்.

மேற்குறிப்பிட்டவாறு கணிணி விவரப் பதிவாளர்கள் 37 நபர்கள், ஒரு சூப்பர்வைசர் மற்றும் ஒரு நெட் வொர்க் பொறியாளர் இம்மாநகராட்சிக்கு தொடர்ந்து தேவைப்படுகிறது. கணிணி விவரப் பதிவாளர்கள் மற்றும் சூப்பர்வைசர்களின் ஊதியம் தற்போதைய விலைவாசிப்படி வழங்கப்பட வேண்டி இருக்கும். மேலும் தேவைக்கேற்ப கூடுதல் கணிணி விவரப் பதிவாளர்கள் பயன்படுத்த வேண்டியிருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஆண்டுக்கு மொத்த உத்தேச செலவினம் சுமார் ரூ20 இலட்சம் வரை ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட ஓராண்டு செலவினத்திற்கு அனுமதி வழங்கவும் இப்பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரி குறைந்த விலை விகிதம் அளிக்கும் நிறுவனத்திற்கு இப்பணியை வழங்கவும் அனுமதிக்காகவும், புதிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் வரை தற்போதுள்ள M/s. KGISL, கோவை நிறுனத்திடமிருந்தே தற்போதைய விலை விகிதத்திலேயே இச்சேவையைத் தொடர அனுமதி வேண்டியும் மன்ற பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண் 14040/ 07/ குவி

<u>மாநகர மன்ற தீர்மான எண் 118 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 36

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 16க்குட்பட்ட ஹட்கோ காலனி மற்றும் அண்ணா நகர் பகுதியை இணைக்கும் இணைப்பு பாலத்தில் சாலையுடன் கூடிய தடுப்புச் சுவர் மாநகர மாமன்ற உறுப்பினர் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளின்படி கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 24,80,000-ற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 24,80,000-ற்கு நடப்பு நிதியாண்டில் 2007-2008 –ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 24,80,000-ற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> அனுமதிக்கலாம். ந.க.எண் 15346 /07 / எம்.டி.2

மாநகர மன்ற தீர்மான எண் 119 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் : 37

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 16க்குட்பட்ட ஹட்கோ காலனி மற்றும் அண்ணா நகர் பகுதியை இணைக்கும் இணைப்பு சாலையில் வாய்காலின் குறுக்காக இணைப்பு பாலம் , மாநகர மாமன்ற உறுப்பினர் மற்றும் பொது மக்களின் வேண்டுகோளின்படி கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 24,60,000-ற்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 24,60,000-ற்கு நடப்பு நிதியாண்டில் 2007-2008- ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 15344 /07 / எம்.டி.2

மாநகர மன்ற தீர்மான எண் 120 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 38

தி/ள் சாந்தி சோசியல் சர்வீஸஸ் நிறுவனத்தின் நிர்வாக தாளாளர் 19-10-2005 தேதியில் ஆணையாளருக்கு சமர்ப்பித்த கடிதத்தில் கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் , சிங்காநல்லூர் கிராமம் , க.ச.எண் - 324-ல் உள்ள சிங்காநல்லூர் மயானத்தில் மேற்படி அவர்களது அறக்கட்டளையின் சொந்த செலவில் இயற்கை தாவர வாயு உதவியுடன் கூடிய மயானம் அமைக்க மேற்படி மயானத்தில் மூன்று ஏக்கர் நிலம் வழங்க கோரியுள்ளனர்.

இது பொதுமக்கள் நலன் குறித்த காரணத்தால் சிங்காநல்லூர் மயானத்தில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் மயானம் அமைத்து பராமரிக்க திருவாளர்கள் சாந்தி சோசியல் சர்வீஸஸ் நிறுவனத்திற்கு 30 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க அரசுக்கு உரிய பிரேரணை அனுப்பி வைக்க மாமன்றம் தனது தீர்மான எண் 242, நாள் 16-12-05-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அரசின் 20-04-2007-ம் தேதிய கடிதத்தில் திருவாளர்கள் சாந்தி சோசியல் சர்வீஸஸ் நிறுவனத்திற்கு இயற்றப்பட்ட நிபந்தனைகளில் மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவீதத்தை மேற்படி நிறுவனம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பாக ( டெபாசிட்) காண்பிக்கப்பட வேண்டும், என்ற நிபந்தனை விதிக்க வில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்திற்கு மொத்த மதிப்பீட்டுத் தொகையில் (30 இலட்சம் ) 25 சதவீதத்தை நிறுவனம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு இருப்பதாக காண்பிக்கப்பட வேண்டும், என்று மாநகராட்சி கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. திருவாளர்கள் சாந்தி சோசியல் சர்வீஸஸ் நிறுவனம் தங்களது 31-08-2007-ம் தேதிய கடிதத்தில் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவீதத்தை ( ரூ. 7,50,000-) வைப்புத் தொகையாக ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் ரசீது எண் 837681 நாள் 29-08-2007 –ன் படி இருப்பு வைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே விதித்துள்ள (30) நிபந்தனைகளுடன் மேற்குறிப்பிட்ட நிபந்தனையையும் சேர்க்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். 16273/05/(எம்.டி2) எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மான எண் 121 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் :39

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம் , விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண் 302/2பி மயான நிலத்தில் 1.49 ஏக்கர் பரப்பளவு நிலத்தை பீளமேடு பொது நல நிறுவனத்திற்கு ரூ.102 இலட்சம் செலவில் குத்தகை அடிப்படையில் மின்சார எரியூட்டு சாதனம் அமைப்பதற்கு அரசாணை (எண்-2டி) 38 நாள் 06-06-2005 மற்றும் மா.ந.ம.தீ.எண் 204 நாள் 21-10-2005-ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 24-11-2005 அன்று மின்சார எரியூட்டு சாதனம் அமைத்து பராமரித்தல் பணிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

தற்போது பீளமேடு பொது நல நிறுவனத்தார் கடந்த 1½ ஆண்டுகளாக மின்சார எரியூட்டு சாதனம் அமைப்பதற்கான பணியினை சரிவர மேற்கொள்ளப்படாமல் தொய்வு ஏற்பட்டு ஆரம்ப நிலையில் பணி நடைபெறாமல் உள்ளது.

தவிர பீளமேடு பொதுநலநிறுவனத்தார் மாநகாட்சிக்கு அளித்துள்ள 10-09-2007 நாள் கடிதத்தில் மேற்படி பணியினை M/s P.S.G.& Sons Charities நிறுவனத்தாருடன் தொடர்புகொண்டு கலந்தாய்வில் M/s P.S.G.& Sons Charities நிறுவனத்தார் பீளமேடு பகுதியில் மின்சார எரியூட்டு சாதனம் அமைப்பதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளதாக தெரியப்படுத்தி உள்ளார்கள். மேலும் M/s P.S.G.& Sons Charities நிறுவனத்தாரின் கடிதம் நாள் 11-09-2007-ல் பீளமேடு விளாங்குறிச்சி கிராமம் க.ச.எண் 302 /2பி மயான நிலத்தில் மின்சார எரியூட்டு சாதனம் அமைக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ள உள்ளதாக உறுதியளித்துள்ளார்கள்.

மேற்படி M/s P.S.G.& Sons Charities நிறுவனத்தார் இது போன்ற பொதுப் பணிகளில் மேற்கொண்டு வருவதால் க.ச.எண் 302 /2பி பீளமேடு மாநகராட்சி மயான நிலத்தில் 1.49 ஏக்கர் நிலத்தினை M/s P.S.G.& Sons Charities நிறுவனத்தாருக்கு குத்தகை அடிப்படையில் அதே அரசாணை (எண்-2டி) 38 நாள் 06-06-2005 நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ. 102 இலட்சம் செலவில் மின்சார எரியூட்டு சாதனம் அமைப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் எதிர்நோக்கி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண் 12252 /97 / எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மான எண் 122 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண். 40

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளுக்கு 16.07.2007-ம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு மட்டும் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

<u>1. என்.எச். ரோடு வணிக வளாகம் (புதிய கடைகள்)</u>

| வ. எண். | கடை எண். | ஏலதாரர் பெயர் | அளவு | உயர்ந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | 4 | ஆர்.கோபாலகிருஷ்ணன் | 10'x12' | ரூ.6,000/- மாதம் ஒன்றுக்கு |

இவ்வணிக வளாகத்தில் கடை எண்.2 மற்றும் 3 ஆகிய கடைகள் மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. முத்து விநாயகர் கோவில் வீதி வணிக வளாகம்.

| வ. எண். | கடை எண். | ஏலதாரர் பெயர் | அளவு | உயர்ந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | 1 | பி.நாகலட்சுமி | 10'x10' | ரூ.1,500/- மாதம் ஒன்றுக்கு |
| 2. | 2 | கே.பாலசுப்பிரமணி | 10'x10' | ரூ.2,000/- மாதம் ஒன்றுக்கு |

இவ்வணிக வளாகத்தில் கடை எண்.1-ஐ சபல் மார்க்கெட்டிங் நிறுவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.4,800/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படியார் இக்கடையினை மாநகராட்சி வசமே ஒப்படை செய்துவிட்டனர். மேலும் கடை எண்.2 ஆனது இவ்வணிக வளாகம் கட்டப்பட்ட நாளிலிருந்து காலியாகவே உள்ளது.

மேற்படி ஏலக்கோரிக்கைகளை ஏற்பது தொடர்பாக வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.21, நாள்.17.08.2007-ல் அனுமதிக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க. எண்.22659/2003/அ10

மாநகர மன்ற தீர்மான எண் 123 நாள் 24.09.07

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 17.08.07 ம் தேதிய தீர்மானம் எண். 21ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 41

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகங்களில் வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்துள்ள கீழ்காணும் கடைகளுக்கு வாடகையினை உயர்வு செய்து மேற்கொண்டு மூன்று வருடங்களுக்கு உரிமம் புதுப்பிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் மேற்படி குழு தனது தீர்மான எண்.17 நாள் 22-01-2007ல் வணிக வளாக கடைகளுக்கு 15% வாடகை உயர்வு செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றியது. இதன்மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டது.

1. மத்திய பேருந்து நிலையம்
2. நகர பேருந்து நிலையம் அண்ணா வணிக வளாகம்
3. என்.எச். ரோடு பழைய கடைகள்
4. என்.எச். ரோடு புதிய கடைகள்
5. என்.எச். ரோடு டீலக்ஸ் டாய்லெட் அருகில்
6. உக்கடம் பேருந்து நிலையம்
7. வின்சென்ட் ரோடு
8. ஒப்பணக்கார வீதி வணிக வளாகம்
9. பட்டுநூல்கார சந்து
10. உப்புக்கிணர் சந்து
11. போத்தனூர் ரோடு

மாமன்றம் தனது தீர்மான எண்.312 நாள் 30-3-07ல் தனியார் கடைகளின் வாடகை மதிப்பும், மார்க்கெட் வாடகை மதிப்பும் குறைவாக உள்ள கடைகளுக்கு, தற்போது உள்ள வாடகையிலிருந்து 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யவும், சில குறிப்பிட்ட இடங்களில் தனியார் கடைகளின் வாடகை மதிப்பும், மார்க்கெட் வாடகை மதிப்பும் மிக அதிகமாக இருப்பதனால் இதர கடைகளுக்கு தற்போதுள்ள வாடகையிலிருந்து 40 சதவீதம் வாடகை உயர்வு செய்யலாம் எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி மாமன்ற தீர்மானத்தின்படி வரிசை எண்.4, 5, 6, 10ல் உள்ள வளாகங்களில் உள்ள கடைகளுக்கு மட்டும் 15 சதவீத வாடகை உயர்வும், கீழ்க்குறிப்பிட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு 40 சதவீதமும் வாடகை உயர்வு செய்யப்பட்டது.

1. மத்திய பேருந்து நிலையம் வணிக வளாகம் (கடை எண்.1 முதல் 30 வரை)
2. காந்திபுரம் நகர பேருந்து நிலையம் அண்ணா வணிக வளாகம் (கடை எண்.2 முதல் 23 வரை)
3. என்.எச். ரோடு பழைய கடைகள் (கடை எண்.2 முதல் 6 வரை)
4. போத்தனூா் ரோடு கடைகள் (கடை எண்.1 முதல் 12 வரை)
5. வின்சென்ட் ரோடு வணிக வளாகக் கடைகள் (கடை எண்.1 முதல் 31 வரை)
6. ஒப்பணக்கார வீதி வணிக வளாகக் கடைகள் (கடை எண்.1 முதல் 5 மற்றும் 7, 8)

மேற்படி வாடகை உயா்வு செய்யப்பட்டுள்ள வணிக வளாகங்களில் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் அண்ணா வணிக வளாகக் கடைதாரா்கள் மட்டும் மேற்படி 40% வாடகை உயா்வினை 15% குறைத்துத் தருமாறு கோரி விண்ணப்பம் அளித்துள்ளனா்.

மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவா் தனது 25-7-2007ம் தேதிய கடிதத்தில் மேற்படி வாடகை உயா்வினை மறு பரிசீலனை செய்ய உள்ளதால், மன்றத்திற்கு பொருள் வைக்குமாறு தெரிவித்துள்ளாா்.

எனவே இதுகுறித்து முடிவு செய்வது குறித்து நகராட்சி நிா்வாக ஆணையரின் அனுமதி பெற்று முடிவு செய்யலாம் என்ற அலுவலக குறிப்புடன் வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழுவின் பாா்வைக்கும் உத்திரவிற்கும் பொருள் வைக்கப்பட்டது.

வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண்.20, நாள்.17.08.2007-ல் கடை உரிமையாளா் ஏற்கனவே செலுத்தி வரும் வாடகை மிக மிக அதிகமாக உள்ளதாகவும், மிகவும் சிரமமாக இருப்பதால் வணிக வளாக கடைதாரா்கள் 40 சதவீத வாடகை உயா்வினை 15 சதவீதமாக குறைத்துத் தருமாறு கோரி விண்ணப்பங்கள் அளித்ததின் பேரில் தற்போதைய அரசாணையில் 15% வாடகை உயா்த்தலாம் என அரசாணை பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில் தற்பொழுது உயா்வு செய்யப்பட்டுள்ள அனைத்து வணிக வளாகங்களுக்கும் 15% ஆக குறைப்பதற்கு மன்றத்தின் அனுமதி பெற பொருள் வைக்கலாம் என தீா்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி விரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் மன்றத்தின் பாா்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு -</u> நகராட்சி நிா்வாக ஆணையரின் அனுமதி பெற்று முடிவு செய்யலாம்.

ந.க.எண் 22659/2003/ அ10

<u>மாநகர மன்ற தீா்மான எண் 124 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆா். வெங்கடாசலம்)
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 42

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட டாக்டா் நஞ்சப்பா ரோடு வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு அலுவலகங்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலகங்களுக்கு மட்டும் ஏற்கனவே மாமன்ற தீா்மான எண்.81, நாள். 23.07.2007-ல் வாடகை உயா்வு செய்யப்பட்டுள்ளதை அரசு ஆணை (டி) எண். 135, நாள். 13.07.1994-ன்படி மறு நிா்ணயம் செய்து 15% வாடகை உயா்வு செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டது.

| வ. எண். | அரசு துறை அலுவலகம் | உரிமக் காலம் | தற்போதைய வாடகை | 15% உயா்வு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | வணிக வரி அலுவலா், பீளமேடு, தெற்கு வட்டம் | 01.04.2005 - 31.03.2008 | ரூ 6,504/- | ரூ7,480/- |
| 2. | வணிக வரி அலுவலா், (அ) பீளமேடு, வடக்கு வட்டம் | 01.04.2004 - 31.03.2007 | ரூ8,463/- | ரூ9,732/- |
| | வணிக வரி அலுவலா் (ஆ) பீளமேடு, வடக்கு வட்டம் | 01.04.2007 - 31.03.2010 | ரூ9,732/- | ரூ11,192/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நகர ஊரமைப்பு துணை இயக்குநா் அலுவலகம் | 01.04.2005 - 31.03.2008 | ரூ20,280/- | ரூ23,322/- |

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீா்மான எண்.22, நாள். 17.08.2007-ல் மேற்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயா்வு செய்ய அனுமதி அளித்துள்ளது. மேற்படி வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 4792 / 2003 / அ10

மாநகர மன்ற தீா்மான எண் 125 நாள் 24.09.07

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 17.08.07 ம் தேதிய தீா்மானம் எண். 22ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆா். வெங்கடாசலம்)
மேயா்
கோயம்புத்துாா் மாநகராட்சி

---

பொருள் எண் :43

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம், பிரதான அலுவலகத்தில் தோ்தல் பிரிவு அலுவலக கட்டிடத்தின் இரண்டாம் தளத்தில் ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்ட அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாாிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு ரூ.25.00 இலட்சத்திற்கு நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்ட அலுவலகத்திற்கு தனியே இடம் தேவைப்படுகிறது. தற்பொழுது உள்ள கட்டிடங்கள் இத்திட்ட அலுவலகத்திற்கு போதுமானதாக இல்லை. எனவே புதிதாக அலுவலக கட்டிடம் கட்டலாம். பின்னா் இச்செலவினத்திற்கு சிறப்பினமாக ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்ட மானியம் கோாிப் பெறலாம். அனுமதிக்கலாம்.

ந.க.எண். 15352/07/எம்.டி.4

மாநகர மன்ற தீா்மான எண் 126 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆா். வெங்கடாசலம்)
மேயா்
கோயம்புத்துாா் மாநகராட்சி

---

பொருள் எண் :44

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம், பிரதான அலுவலக வளாகத்தில் கட்டப்படவுள்ள ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்ட அலுவலக கட்டிடத்திற்கு உட்புற வடிவமைப்பு மற்றும் தொலைபேசி வசதிகள் செய்யவும் கணினிகள் இயக்குவதற்குகான மேசை நாற்காலிகள், கேபிள் இணைப்புகள் வழங்குதல் போன்றவற்றிற்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாாிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்திற்கு நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்ட அலுவலகத்திற்கு மேற்கூறிய வசதிகள் தேவைப்படுகிறது. எனவே இப்பணிகளை மேற்கொண்டு, பின்னா் இச்செலவினத்திற்கு சிறப்பினமாக ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்பு திட்ட மானியம் கோாிப் பெறலாம். அனுமதிக்கலாம்.

ந.க.எண். 15353/07/எம்.டி.4

மாநகர மன்ற தீர்மான எண் 127 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :45**

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம், பிரதான அலுவலக வளாகத்தில் கட்டப்படவுள்ள ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட அலுவலக கட்டிடத்திற்கு குளிர்சாதன வசதி தளவாடங்கள், மின்வசதி செய்தல், மேல்கூரை அமைத்தல் மற்றும் கூட்ட அறை வசதிகள் செய்யும் பணிக்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட அலுவலகத்திற்கு மேற்கூறிய வசதிகள் தேவைப்படுகிறது எனவே இப்பணிகளை மேற்கொண்டு, பின்னர் இச்செலவினத்திற்கு சிறப்பினமாக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட மானியம் கோரிப் பெறலாம். அனுமதிக்கலாம்.

ந.க.எண். 15354/07/எம்.டி.4

மாநகர மன்ற தீர்மான எண் 128 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் :46**

கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம் , பிரதான அலுவலக வளாகத்தில் கட்டப்படவுள்ள ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட அலுவலக கட்டிடத்திற்கு வெர்ட்டிபைடு சிலாப் கற்கள் பதித்தல் மற்றும் சுகாதார வசதி , குடிநீர் வசதி செய்யும் பணிக்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட அலுவலகத்திற்கு மேற்கூறிய வசதிகள் தேவைப்படுகிறது எனவே இப்பணிகளை மேற்கொண்டு, பின்னர் இச்செலவினத்திற்கு சிறப்பினமாக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட மானியம் கோரிப் பெறலாம். அனுமதிக்கலாம்.

ந.க.எண். 15355/07/எம்.டி.4

மாநகர மன்ற தீர்மான எண் 129 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண்.47**

மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் அவர்கள் தமது ந.க. எண் . 40449/2001/ஆ7 நாள் . 24.8.07 -ம் தேதிய கடிதத்தில், கோயம்புத்தூர் டவுன் சர்வே எண். 2/1010 கன்சாவென்சி புறம்போக்கில் 0.10 ஏக்கர் நிலத்தினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் " பூமாலை மகளிர் சுயவேலைவாய்ப்பு திட்டத்தின் " மூலம் கட்டி முடிக்கப்பட்டு உபயோத்தில் இருந்து வரும் வணிக வளாகத்திற்காக மாவட்ட ஊரக வள்ர்ச்சி முகமைக்கு, நில உரிமை மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாகவும், இந்நேர்வுகளில் மாநகராட்சியின் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி கருத்தினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இடம் கோயம்புத்தூர் மாநகராட்சி ராஜவீதி - பெரியகடைவீதி சந்திப்பில் உள்ள மணிக்கூண்டு அருகில் உள்ளது. தற்போது அவ்விடத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு வணிக வளாகம் உபயோகத்தில் இருந்து வருகிறது.

எனவே கோயம்புத்தூர் டவுன் சர்வே எண் . 2/1010 -ல் உள்ள 0.10 ஏக்கர் கன்சர்வென்சி நிலத்தினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனையில்லை என்பதை மாவட்ட வருவாய் அலுவலர்க்கு தெரிவிக்க மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக் குறிப்பு : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் ந.க.எண் : 16007/2007/MH5.

<u>மாநகர மன்ற தீர்மான எண் 130 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 48.

மாவட்ட ஆட்சித்தலைவர் கோயம்புத்தூர் அவர்கள் தமது ந.க. எண் . 6239/2007/ இ3 நாள். 9.2.2007-ம் தேதிய கடிதத்தில், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா நினைவாக, மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் நினைவுத் தூண் கோயம்புத்தூர் லாலிரோடு (லாலிரோடு - தடாகம்ரோடு சந்திப்பு) தற்போதுள்ள சாலைதிட்டு அமைந்துள்ள இடத்தில் அமைக்க, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் ப.பொ / உ. பொ/டி-243-1/2006. நாள் . 29.1.2007 -ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார் என்றும், இது குறித்து மாநகராட்சியின் கருத்துருவை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண். 221 ந. நி (ம) கு. வ. துறை, நாள். 20.11.1998 -ன்படி புதியதாக சிலை மற்றும் நினைவுத்தூண் நிறுவதற்கு கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

1. புதியதாக சிலை வைப்பதாக இருந்தால், அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்படவேண்டும்.
2. சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநகராட்சியால் பராமரிக்க இயலாது.
3. சிலைகள் வெண்கலத்தால் நிறுவப்பட வேண்டும்.

மேலும், அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு கோயம்புத்தூர் லாலிரோடு - தடாகம் சாலை சந்திப்பில் உள்ள சாலைதிட்டில் மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருச்சிலைக்கு மற்றும் நினைவுத்தூண் அமைக்க மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லை என்பதை மாவட்ட ஆட்சியர்க்கு தெரிவிக்க மாமன்றத்திற்கு முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகரிக்கலாம். ந.க.எண் : 943/2007/H1(மே)

<u>மாநகர மன்ற தீர்மான எண் 131 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 49

மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் தமது 3.2.2007 -ம் தேதிய (கடிதம் எண். ந.க. 4912 / 2007 / இ3) கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்ட மத்திய - மாநில பொதுத் துறைகளில் பணிபுரிகின்ற எஸ். சி / எஸ்.டி ஊழியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு, கோயம்புத்தூர் மாநகரில் நீதி மன்ற வளாகத்திற்கு முன்போ, தெற்கு வட்டாச்சியர்

அலுவலகத்திற்கு முன்போ அல்லது சிவானந்தா காலனிரோடு பவர் ஹவுஸ் அருகிலோ டாக்டர். அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு முழு உருவச்சிலை அமைக்க அனுமதி கோரியுள்ளதாகவும், இது குறித்து மாநகராட்சியின் அறிக்கை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட நீதி மன்ற வளாக முன்புறம் 3 போக்குவரத்து தீவுகள் உள்ளது. ஒரு போக்குவரத்து தீவில் ஸ்தூபி அமைக்கப்பட்டுள்ளது. மற்ற 2 போக்குவரத்து தீவுகளில் ஏதாவது ஒன்றில் டாக்டர். அம்பேத்கார் முழு உருவச் சிலை அமைக்கலாம், சிலைகள் நிறுவுதல் குறித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 221 ந. நி. (ம) கு. வ. துறை நாள் . 20.11.1998-ன்படி புதியதாக சிலை நிறுவுவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்ற வேண்டும்.

1. புதியதாக சிலை வைப்பதாக இருந்தால், அது அரசின் முன் அனுமதி பெற்ற பின்னரே வைக்கப்பட வேண்டும்.
2. சிலைகளை வைப்பவர்களே பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநகராட்சியால் பராமரிக்க இயலாது.
3. சிலைகள் வெண்கலத்தால் நிறுவப்பட வேண்டும்.

மேலும், அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி இடத்தில் டாக்டர். அம்பேத்கார் முழு உருவச் சிலை அமைக்க மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லை என்பதை மாவட்ட ஆட்சியர்க்கு தெரிவிக்க மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அங்கீகரிக்கலாம். ந.க.எண் : 2223/2007/MH5.

மாநகர மன்ற தீர்மான எண் 132 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண்:50

குத்தகை-கோயம்புத்தூர் மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-சிங்காநல்லூர் பேருந்து நிலையம் உணவகம் நடத்தும் உரிமம்-(12.9.2005 முதல் 31.8.2008 முடிய) திரு. எ. சந்திரன் என்பவருக்கு ஒப்படை செய்யப்பட்டது-ரத்து செய்து மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருதல்-தொடர்பாக.

---------

மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உணவகம் நடத்தும் உரிமைக்கான மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு அதிகபட்சமாக மாத வாடகை ரூ.3,300/-க்கு ஏலம் கோரிய திரு.எ. சந்திரன் என்பவருக்கு 12.9.2005 முதல் 31.8.2008 முடிய மூன்றாண்டு காலத்திற்கு ஒப்படை செய்ய மாமன்றம் தனது தீர்மான எண்.101 நாள் 29.8.2005-ன்படி அனுமதி வழங்கியதன் அடிப்படையில் இவ்வலுவலக உத்திரவு எண்.16649/2004/கிஅ7 நாள் 12.9.2005-ன் மூலம் ஒப்படை செய்யப்பட்டது. மேலும் குத்தகை விதிகளின்படி குத்தகைதாரரிடமிருந்து கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வைப்புத் தொகை | - | ரூ.50,000/- |
| ஓராண்டு முன்வைப்புத்தொகை | - | ரூ.39,600/- |
| மொத்தம் | - | ரூ.89,600/- |

மேலும் மே 2006 முதல் ஆகஸ்ட் 2007 வரையிலான காலத்திற்கு குத்தகைதாரரால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவை ரூ.52,800/-ஐ செலுத்தக்கோரி 10.1.2007, 9.3.2007மற்றும் 26.6.2007 ஆகிய தேதிய இவ்வலுவலக கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டும், இவ்வலுவலக அலுவலர்கள் வாயிலாக நேரில் அறிவுறுத்தப்பட்டும், நாளது தேதிவரை நிலுவைத் தொகை ஏதும் செலுத்தப்படவில்லை. மேலும் உணவகம் நடத்தப்படாமல் பூட்டப்பட்டுள்ளது.

எனவே மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகள் 16,23,26 மற்றும் 27 மற்றும் சிறப்பு நிபந்தனை எண்.15 மற்றும் 16-ன்படி, மாநகராட்சி குத்தகை விதிகளுக்கு முரணாக மாதாந்திர வாடகைத் தொகை செலுத்தாத காரணத்தினாலும், உணவகத்தினை நடத்தாமல் பூட்டிவிட்டதாலும், சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உள்ள உணவகத்தினை 12.9.2005

முதல் 31.8.2008 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு நடத்த திரு.எ. சந்திரன் என்பவருக்கு மாமன்ற தீர்மான எண்.101 நாள் 29.8.2005-மூலம் வழங்கப்பட்ட உரிமத்தினை ரத்து செய்து, அவர் செலுத்தியுள்ள வாடகை முன்பணத்திலிருந்து அவர் செலுத்த வேண்டிய வாடகை நிலுவை ரூ.52,800/-ஐ சரிசெய்து கொள்ளவும், மேலும் மீதம் உள்ள தொகையினை மறுஏலம் விடுவதினால் ஏற்படும் இழப்பிற்கு ஈடு செய்து கொள்ளலாம்.

மேலும் உணவகம் நடத்தும் உரிமத்திற்கு மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒதுக்கீடு செய்யவும், அதற்குண்டான செலவினங்களை ஏற்றுக்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க. எண்.16649/ 2006/ கிஅ .7 )

<u>மாநகர மன்ற தீர்மான எண் 133 நாள் 24.09.07</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 51

பொருள் - பணியமைப்பு-கோவை மாநகராட்சி-மருத்துவ அலுவலர் பணியிடங்கள் மன்றத்தின் அனுமதியை பெற்று அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நியமனம் செய்தல்-தொடர்பாக.

இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 7 (ஏழு) மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கு நேரிடை நியமனம் செய்ய உதவி இயக்கநர், தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை அவர்களின் கடிதம் அ.ஆ.எண். எக்ஸ்.2 2006 நாள் 31.7.2007-ல் தகுதியாக நபர்களின் பெயர்ப்பட்டியல் பெறப்பட்டது. இவர்களை 24.8.2007 அன்று காலை 11.00 மணியளவில் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நியமனக்குழு முன்னிலையில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் ஆஜராக கடிதம் அனுப்பப்பட்டதில் கீழ்கண்ட 3 நபர்கள் நேர்முக தேர்விற்கு அசல் சான்றிதழ்களுடன் ஆஜராகினர்.

இம்மூன்று நபர்களையும் நியமனக்குழு தனது தீர்மானம் எண். 15 நாள் 24.8.2007ல் மருத்துவ அலுவலர் பணியிடத்திற்கு தற்காலிகமாக நியமனம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. இப்பட்டியலில் கண்ட தகுதியான நபர்கள் மாநகராட்சி பொது சுகாதாரப் பணியமைப்பு விதி 1996ன்படி வகுப்பு 2 -ன் கீழ் வருவதாலும் மாநகராட்சி சட்டம் பிரிவு 106(2)(b) -ன்படி இப்பணிடத்தை அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு மாமன்றம் நிரப்பலாம் என்பதாலும் மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நிரப்ப மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் /விலாசம் | இனவாரிசுழற்சி | பிறந்த தேதி | வயது | கல்விதகுதி |
|---|---|---|---|---|---|
| 1) | டி. ஹேமலதா,<br>எண் 72, நாராயணகுரு ரோடு.சாய்பாபாகாலனி.<br>கோயம்புத்தூர்-641 011 | B.C.Non Priority | 26/07/72 | 35 | எம்.பி.பி.எஸ் (மெடிசன்ஸ் அன்ட் சர்ஜன்) |
| 2) | கே.எல்.பூமிகா,<br>எண் 177, மின்னவேட்டுவம்பாளையம்<br>சலங்கபாளையம் போஸ்ட்,<br>பவானி, ஈரோடு மாவட்டம்-638455<br>(Siddha) | General Turn Priority<br>(Ex-Servicemen) | 10/12/1980 | 27 | பி.எஸ்.எம்.எஸ் (மெடிசன் சித்தா) |
| 3) | பி. செண்பகம்,<br>7, தவுலத் நகர்<br>கடலூர் தாலுக்கா, கடலூர்<br>(Ayurvedic) | General Turn Priority<br>(Physically handicapped) | 28/04/80 | 27 | மெடிசன் (ஆயுர்வேதிக்) |

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண் 446/2007/ எம்.சி 6

மாநகர மன்ற தீர்மான எண் 134 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஓம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 52

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி. பூங்கா அவினாசி ரோடு மைதானத்தில் கீழ்காணும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்கனவே மாமன்ற தீர்மான எண். 487 நாள் 24-2-1999ன்படி வசூல் செய்யப்பட்டு வரும் கட்டணங்களை உயர்வு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 9, நாள். 17.08.2007 கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

| வ. எண் | நிகழ்ச்சிகள் | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் (நாள் ஒன்றுக்கு) | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் பரிந்துரை |
|---|---|---|---|
| 1. | அரசியல் பொதுக்கூட்டம் | ரூ. 1,000/- | ரூ. 7,500/- |
| 2. | அரசு நடத்தும் விழாக்களுக்கு | ரூ. 100/- | ரூ. 1,000/- |
| 3. | தனியார் பொருட்காட்சி மற்றும் வியாபாரம் செய்ய | ரூ. 10,000/- | ரூ. 12,500/- |
| 4. | மத சம்பந்தமான நிகழ்ச்சிகள் நாள் ஒன்றுக்கு | ரூ. 6,500/- | ரூ. 25,000/- |
| 5. | சர்க்கஸ் நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு | ரூ. 3,000/- | ரூ. 3,000/- |
| 6. | அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாடுகளுக்கு மைதானம் மற்றும் மேடை உட்பட | ரூ. 5,000/- | ரூ. 15,000/- |
| 7. | அரசு நடத்தும் பொருட்காட்சிக்கு | ரூ. 500/- | ரூ. 2,000/- |

அரசாணை எண்.73 நாள் 29-05-2007ல் புத்தக கண்காட்சி நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.1,000/- நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பித்து உள்ளது. இவ்வினத்திற்கும் ஷை மைதானத்தில் மாமன்ற தீர்மானத்தின்படி வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட இனங்கள் தவிர, கீழ்காணும் இதர இனங்களுக்கும் கீழ்காணுமாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வ, எண் | நிகழ்ச்சிகள் | கட்டணம் (நாள் ஒன்றுக்கு) | காப்புத் தொகை |
|---|---|---|---|
| 8. | புத்தகக் கண்காட்சி நடத்தப்படுவதற்கு | ரூ. 1,000/- | ரூ. 5,000/- |
| 9. | மகளிர் சுய உதவிக் குழு மூலம் நடத்தப்படும் மகளிர் தினவிழா நடத்துவதற்கு | ரூ. 5,00/- | ரூ. 5,00/- |
| 10. | இரண்டு சக்கர வாகன பந்தய நிகழ்ச்சிகள் | ரூ. 5,000/- | ரூ. 10,000/- |
| 11. | நான்கு சக்கர வாகன இலவச பரிசோதனை முகாம் | ரூ. 5,000/- | ரூ. 10,000/- |
| 12. | தன்னார்வ தொண்ட நிறுவன அமைப்பு மூலம் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் | ரூ. 1,000/- | ரூ. 1,000/- |
| 13. | மேற்குறிப்பிட்டுள்ள இனங்கள் தவிர வர்த்தகரீதியாக சிறிய அளவில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் | ரூ. 5,000/- | ரூ. 10,000/- |
| 14. | வர்த்தக ரீதியாக இல்லாமல் பொதுநல நோக்கில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் | ரூ. 1,000/- | ரூ. 5,000/- |
| 15. | இசை இரவு போன்ற நிகழ்ச்சிகள் | ரூ. 10,000/- | ரூ. 25,000/- |

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதிக்கு மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க. எண்.3087/2007/அ10

மாநகர மன்ற தீர்மான எண் 135 நாள் 24.09.07

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 17.08.2007 ம் தேதிய தீர்மானம் எண்.92ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 53

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் 5 வார்டு எண் 66 கணபதி வேதம்மாள் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட மதிப்பீடு ரூ 20,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிர்வாக பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாகும். மழையால் ஏற்படும் வெள்ள பாதிப்பை தடுக்கும் பொருட்டு, அவசியம் கருதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே வார்டு எண் 66 கணபதி வேதம்மாள் நகரில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட தயாரிக்கப்பட்ட இம்மதிப்பீடு ரூ 20,00,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். ந.க.எண் 4360/07/ டி1வ/எம்டி2

மாநகர மன்ற தீர்மான எண் 136 நாள் 24.09.07

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒம். ஆர். வெங்கடாசலம்)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி